Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror


THURSDAY, AUGUST 18, 2022

வியாழக்கிழமை, 18 ஒகஸ்ட் 2022 | ஒளி: 08 கதிர் 078 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

புலம்பெயர் அமைப்புகளின் உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு

# டயஸ்போரா காரியாலயம்

## வார இறுதியில் அவசரகால சட்டமும் நீக்கப்படும்



நாடு தற்போது வழமைக்கு திரும்பிக்கொண்டுள்ள காரணத்தினால் அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்க எதிர்பார்க்கவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். புலம்பெயர் அமைப்புகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள டயஸ்போரா காரியாலயம் ஒன்றினை ஸ்தாபிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த காலத்தில் காணப்பட்ட நெருக்கடி நிலைமைகள் தற்போது மாற்றம் பெற்றுள்ளன. அவசரகால சட்டத்தின் தேவை இப்போது இல்லை என்றே கருதுகின்றேன். எனவே, இவ்வார இறுதியில் அவசரகால சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுப்பேன். ஆனால், நாடு மாற்றம் பெற வேண்டும் என்றால் எமது செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இல்லையென்றால் நாம் இன்னுமொரு லெபனனாக மாறுவதை தவிர்க்க முடியாது என்றார்.

இலங்கைக்கான நிதி உதவிகளை பெற்றுக்கொள்ள சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர்கள் மட்டத்தில் செய்துகொள்ளவுள்ள உடன்படிக்கையை உறுதிப்படுத்துவது குறித்த கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன்போது இரண்டு தரப்புகள் எம்முடன் செயற்படுகின்றன என்றார்.

மேற்கு நாடுகள் எமக்கான நிபந்தனைகளுடன் கடன்களை வழங்க முன்வந்துள்ளன. சீனாவும் மேலதிகள் கடன்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## புதன் வருகிறார் கோட்டா



தாய்லாந்தில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார். வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று (17) காலை குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குச் சென்றிருந்த நிலையில், அங்கிருந்து வெளியேறும் போதே உதயங்க வீரதுங்க ஊடகங்களுக்கு இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ என்ற நபரின் பிம்பத்தில் ஒரு துளியைக் கூட கோட்டாபய ராஜபக்ஷ விடம் அவதானிக்க முடியாது. அங்கேதான் தவறு இடம்பெற்றது. மக்களும் அதனை சரியாக விளங்கிக்கொண்டுள்ளனர். அதுமட்டுமல்ல நான் கோட்டாபய ராஜபக்ஷ வுடன் தொடர்பில் உள்ளேன். அவர் விரைவில் இலங்கைக்கு வருவார். மீண்டும் நாட்டுக்காக சேவையாற்றுவார். ஆனால், இனிமேல் அரசியலில் ஈடுபட மாட்டார். அதுமட்டுமல்ல ஒரு அதிகாரியாக அவர் திறைமைசாலியே, எனினும் அரசியல் செய்ய தெரியாதவர். இனியும் அரசியலில் அவரால் ஈடுபட முடியாது. மக்களும் அதனை நன்றாக விளங்கிக்கொண்டுள்ளனர் என்றார்.

இம்மாதம் 24 ஆம் திகதி அவர் நாட்டுக்கு வருவார். இப்போதுள்ள நிலைமையில் அவர் 24 ஆம் திகதி வருவதாக தெரிவித்தார். ஆனால் இறுதி நேரத்தில் அவர் நிலைப்பாட்டை மாற்றுவாரா என கூற முடியாது. அப்போதுள்ள நிலைமைகளை பொறுத்தே அவருடைய தீர்மானம் இருக்கும் என்றார்.

ரூ.215 கோடி பணம் பறித்த வழக்கு

## ஜாக்குலினுக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல்



இந்திய தொழிலதிபரை மிரட்டி ரூ.215 கோடி பணம் பறித்த வழக்கில் இலங்கையைச் சேர்ந்த பாலிவுட் நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார்.

பாலிவுட் நடிகை ஜாக்குலின் பெர்னாண்டசுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை அமலாக்க இயக்குனரகம் நேற்று (17) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நாமே இலங்கைக்கு கைகொடுத்தோம்



இலங்கைக்கு தக்க தருணத்தில் கைகொடுத்த ஒரே நாடு இந்தியா எனவும், இந்தியப் பெருங்கடல் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே வன்முறை வெடிக்கும் முக்கிய பகுதியாக மாறாது எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா தனது தேசிய நலன்களில் கூடியளவு அக்கறை கொள்ள வேண்டும், ஆனால் பிராந்தியத்தில் தனித்துவத்தை கோர முடியாது. பிராந்தியம் முக்கியத்துவம் பெறுவதால், பல நாடுகள் இந்திய பெருங்கடலில் தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்த முயற்சிக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கோட்டா வருவது குறித்து தெரியாது



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எப்போது நாட்டிற்கு வருவார் என்ற எந்தவித உத்தியோகபூர்வ அறிவிப்புகளும் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தாய்லாந்தில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கு வருகை

தொடர்ச்சி P2

## கூட்டமைப்பு செல்லாக் காசு

■ பாறுக் ஷிஹான்



காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தை மழுங்கடிக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஊக்குவிக்க படுகின்றனர். இதில் அவர்களுக்கு இலாபம் உண்டென தெரிவித்துள்ள அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணி, கூட்டமைப்பு ஒரு செல்லாக்காசு என்றார்.

தொடர்ச்சி P2

## தனி நபரொருவரின் மாதச்செலவு ரூ. 12,444

அதிகாரபூர்வ வறுமைக் கோடு அட்டவணை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது. ஜூன் மாதத்துக்கான கணக்கெடுப்பின் அறிக்கைக்கு அமைய, தேசிய ரீதியில் நபரொருவரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறைந்தபட்ச செலவு 12,444 ரூபாயென கணிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், இந்தச் செலவு மாவட்டங்களுக்கு ஏற்ப தனித்தனியாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. அதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் ஒருவரது செலவானது, ஒப்பீட்டு ரீதியில் அதிகமென குறிப்பிடப்பட்டுள்ளதோடு, கொழும்பு மாவட்டத்தில் ஒருவரது ஒருமாத செலவீனம்13,421 ரூபாய் என கணிப்பிடப்பட்டுள்ளது .மொனராகலை மாவட்டமானது குறைந்தபட்ச செலவு கொண்ட மாவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அத்தொகை 11,899 ரூபாவாகும் .

## பசிலின் பாவங்களை மக்கள் சுமக்கின்றனர்

■ பா.நிரோஸ்



மின் கட்டண அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளவே முடியாதென தெரிவிக்கும் 43ஆவது படையணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க, பசில் செய்த பாவச் செயல்களுக்கான விளைவுகளை நாட்டு மக்கள் அனுபவிக்கின்றனர் என்றார்.

தொடர்ச்சி P2



மன்னார், பூநகரியில் காற்றாலை திட்டம்

## அதானி நிறுவனத்துக்கு அனுமதி

500 மில்லியன் டொலர் முதலீட்டில் நிர்மாணிக்கப்படவுள்ள இரு காற்றாலை திட்டங்களை முன்னெடுக்க அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்துக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## தூக்கிலிடும் அளவுக்கு ஊழல் செய்திருக்கின்றனர்

■ பா.நிரோஸ்



நல்லாட்சி அரசாங்கத்தில் வழக்கு தொடரப்பட்ட அரச அதிகாரிகளுக்கு அமைச்சரவை பத்திரம் ஊடாக நட்டஈட்டை வழங்க வேண்டுமென மொட்டுக் கட்சியினர் கோருவது தவறு. நீதிமன்றம் ஊடாகவே

தொடர்ச்சி P2





## அமைச்சுப் பதவிகளை ஏற்காது வெளியில் நின்று ஆதரவளிப்போம்

### கூட்டணிக்கு முன்னணி கடிதம்

■ எஸ்.கணேசன்

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சு பதவியை ஏற்காது வெளியில் இருந்து சர்வகட்சி ஆட்சிக்கு ஒத்துழைக்க முன்வர வேண்டுமென

தொடர்ச்சி P2

வளரும் நாடுகளின் வர்த்தக திட்டத்தில்


## 80 சதவீதம் வரியில்லா ஏற்றுமதி

பிரித்தானியாவின் புதிய வர்த்தக சலுகை திட்டமான வளரும் நாடுகளின் வர்த்தக திட்டத்தில் (DCTS) இலங்கை பாரிய அளவில் பயனடையும் எனவும், புதிய திட்டத்தின் கீழ், 80 சதவீதத்துக்கும் அதிகமான ஏற்றுமதிப் பொருட்களுக்கான வரியில்லா ஏற்றுமதி மூலம் இலங்கை தொடர்ந்து பயனடையும் என்பதுடன், மேலும் 150க்கும் மேற்பட்ட கூடுதல் பொருட்களுக்கான வரிகளும் நீக்கப்படும் எனவும் இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின், வளரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம் (DCTS) உலகின் எந்தவொரு நாட்டினதும் தாராளமான வர்த்தக ஈடுபாடுகளில் ஒன்றாகும், மேலும் இது பொருளாதாரத்தை பலப்படுத்துவதுடன், வாய்ப்புகளை ஆதரிப்பதன் மூலமும் இலங்கைக்கு நன்மை பயக்கும் என இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## தாய்லாந்தில் பதற்றம்: 17 குண்டுகள் வெடிப்பு



தாய்லாந்தின் தெற்கு பகுதி வெடிகுண்டு மற்றும் தீ வைப்புத் தாக்குதல்களால் அதிர்ந்தது.

தாய்லாந்தின் தெற்கு மாகாணங்களான பட்டானி, நாரதிவாட் மற்றும் யாலாவில் ஒரே இரவில் குறைந்தது 17 குண்டுகள் மற்றும் தீவைப்பு தாக்குதல்கள் நடந்தன என செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கு தாய்லாந்தில் குறைந்தது 17 இடங்களில் வெடிப்புகள் மற்றும் தீ விபத்துகள் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்,

ஒருங்கிணைந்த தாக்குதல்களில் பலர் காயமடைந்தனர். குண்டுவெடிப்புகள் மற்றும் தீ வைப்புத் தாக்குதல்கள் செவ்வாய்கிழமை பின் இரவிலும் புதன்கிழமை அதிகாலையிலும் நடந்ததாக இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# டயஸ்போரா காரியாலயம்

ஜப்பானுடனும் இது குறித்து கலந்துரையாடி வருகின்றோம் எனக் குறிப்பிட்ட அவர், நாம் இப்போது புலம்பெயர் அமைப்புகளின் உதவிகளை எதிர்பார்க்கின்றோம். அவர்களின் முதலீடுகள் எமக்கு மிகப்பெரிய பலமாகும். ஆகவே, இதனை கையாள இலங்கையில் டயஸ்போரா காரியாலயம் ஒன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதன் மூலமாக டயஸ்போராக்களை பிரத்தியேகமாக கையாளவும், அவர்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளவும் முடியும் என்றார்.

நாம் தொடர்ந்தும் பழைய அரசியலை முன்னெடுக்க முடியாது. பழைய அரசியல் கொள்கைத்திட்டத்துடன் பயணிக்கப்போகின்றோமா என்ற கேள்வி எழுந்துள்ளது. முதலில் 22ஆவது திருத்த சட்டத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்றிக்கொள்ள வேண்டும், அதேபோல் பாராளுமன்றத்தை அரசாங்கமாக மாற்றிக்கொள்ள வேண்டும். பாராளுமன்ற குழுக்கள் இயக்கப்பட வேண்டும். அதனை தாண்டி புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்திற்கான சாத்தியப்பாடுகள் இருந்தால் அதனையும் செய்தாக வேண்டும் என்றார்.

# கோட்டா வருவது குறித்து தெரியாது

தரவுள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ள நிலையில், தாய்லாந்து அரசாங்கம் அது குறித்து அறிவிக்கவில்லை எனவும், அவர் வருவது குறித்து தடைகள் எதுவும் இல்லை, ஆனால், அரசாங்கத்திற்கு அவ்வாறான அறிவிப்பு கிடைக்கவில்லை என்றார்.



# ஜாக்குலினுக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல்

சுகேஷ் சந்திரசேகர் மிரட்டி பணம் பறிப்பவர் என்பது ஜாக்குலினுக்கு தெரியும் என்றும் அவருக்கு உடந்தையாக ஜாக்குலின் இருந்தார் என்பதும் அமலாக்க இயக்குனரகம் கூறுகிறது.

முன்னதாக, சுகேஷ் சந்திரசேகர், நடிகை ஜாக்குலினுக்கு 10 கோடி ரூபாய் மதிப்பிலான பரிசுகளை அனுப்பியதை கண்டறிந்துள்ளது. அதனால் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் அமலாக்க இயக்குனரகம் இதுவரை நடிகையின் 7 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களை பறிமுதல் செய்துள்ளது.

ஜாக்குலின் பெர்னாண்டஸுக்கு சுகேஷ் சந்திரசேகருடன் தொடர்பு இருப்பதாக கூறி அமலாக்க இயக்குனரகம் பலமுறை விசாரணை நடத்தியது.

சுகேஷ் சந்திரசேகர் மீது 32 கிரிமினல் வழக்குகள் உள்ளதால், பல மாநில காவல்துறை மற்றும் மூன்று மத்திய ஏஜென்சிகள்  சிபிஐ, அமலாக்க இயக்குநரகம் மற்றும் வருமான வரி ஆகியவற்றால் விசாரிக்கப்பட்டு வருகிறது.

புதுடெல்லி தொழிலதிபரின் மனைவியிடம் போலியான அழைப்பு மூலம் ரூ.215 கோடி பணம் பறித்ததாக சுகேஷ் சந்திரசேகர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதனால் அவர் டெல்லி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.



பிறகு அவரிடம் விசாரணை மேற்கொண்டதில் பிரதமர் அலுவலகம், சட்ட அமைச்சகம் மற்றும் உள்துறை அமைச்சக அதிகாரி போல் நடித்து பாதிக்கப்பட்ட பெண்ணிடம் பணம் பறித்துள்ளது தெரியவந்தது.

அதுமட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவருக்கு பிணை வழங்குவதாகவும், அவர்களின் மருந்து வணிகத்தை நடத்துவதாகவும் சுகேஷ் தொலைபேசி வாயிலாக கூறியுள்ளார். அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் தலைவர் டிடிவி தினகரன் மீதான மோசடி வழக்கில் சுகேஷ் சிக்கியுள்ளார். இந்த வழக்கு தொடர்பாக அவர் ஏப்ரல் 4ஆம் திகதி அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டார்.

# நாமே இலங்கைக்கு கைகொடுத்தோம்

இந்தியாவின் அண்டை நாடுகள் கலாச்சார ரீதியாக ஸ்திரமாகவும், பொருளாதார ரீதியாக பிணைக்கப்பட்டும் உள்ளனர். அதேபோல் இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் போது சர்வதேச நாணய நிதியத்தை கையாள்வதில் இலங்கைக்கு இருக்கும் ஒரேயொரு அண்டை நாடு இந்தியா என்றும், எமது அயல் நாடான இலங்கையில் நடப்பவை, இந்தியாவின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படும் எந்த வளர்ச்சியாக



இருந்தாலும் நாங்கள் மிக மிக கவனமாக அவதானித்து வருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# பசிலின் பாவங்களை மக்கள் சுமக்கின்றனர்

மாகாணசபைத் தேர்தலாலேயே ஒரு இலட்ச வேலைத்திட்டங்களை பசில் கொண்டுவந்தார்.எரிமலையின் மேல் அமர்ந்திருப்பதை மறந்துவிட்டே பசில் செயற்பட்டார். அரசியல் அறியாமையால் பசில் செய்த செயல்களுக்கான பாவத்தை நாட்டு மக்கள் தீர்த்துக்கொண்டிருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் கலந்துரையாடலில் நானும் கலந்துக்கொண்டேன். குறைந்தளவில் மின்சாரத்தை பயன்படுத்துவோர் நாட்டில் 33 இலட்ச பேர் இருக்கிறார்கள். அவர்கள் நாட்டின் மொத்த மின் பாவனையில் வெறும் 6 சதவீதத்தையே பயன்படுத்துகிறார்கள் எனவும் கூறினார்.

# கூட்டமைப்பு செல்லாக் காசு

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக கூட்டமைப்பினர் ஏமாற்றி வருகின்றார்கள்.செல்லாக் காசான கூட்டமைப்பினரை இவ்விடயத்தில் தினமும் நம்பி நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை தற்போது உணர்ந்துள்ளோம் என்றார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் நேற்று (17) நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டமானது எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை நிலை தெரியும் வரை தொடரவுள்ளது.138 பேரை அம்பாறை மாவட்டத்தில் இழந்து இருக்கின்றோம்.அது மட்டுமல்ல காணாமல் போனோரின் அலுவலகத்தினை நாங்களும் 8 மாவட்டத்தினை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் வேண்டாம் என்று உறுதியாக நிற்கின்றோம்.

இருந்த போதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காரியாலம் வேண்டும் என்று கூறுவதற்கு காரணம் என்ன?இன்று உறவுகளை இழந்து தவித்த 8 மாவட்டங்களை சேர்ந்த நாங்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம்.அவர்கள் (தமிழ் தேசிய கூட்டமைப்பினர்) இச்செயலில் இறங்குவதானது எமக்கு மனவருத்தத்தை தருவதுடன் ஆத்திரமடைகின்றோம் என்றார்.

செல்லாக் காசான தமிழ் தேசிய கூட்டமைப்பினரை இவ்விடயத்தில் தினமும் நம்பி நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை தற்போது உணர்ந்துள்ளோம். எனவே தான் கூட்டமைப்பினர் எதுவுமே செய்யாமல் ஏமாற்றுபவர்கள் என்றார்.

# தூக்கிலிடும் அளவுக்கு ஊழல் செய்திருக்கின்றனர்

நட்டஈட்டை பெற்றுக்கொள்ள வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசிம் தெரிவித்துள்ளார்.சில அரச அதிகாரிகள் தூக்கிலிடும் அளவுக்கு இலஞ்ச, ஊழல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே யே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டொலர்களை கடன்களாக பெற்றுக்கொண்டு நாட்டுக்குப் பிரயோசனமற்ற அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் தேசிய, சர்வதேச மட்டத்தில் நாடு வங்குரோத்தடைந்தது. 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையில் அரச நிறுவனங்களில் ஒரு ட்ரில்லியன் ரூபாய்க்கு மேலதிகமாக கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மின்சார சபை 2020ஆம் ஆண்டு 70 பில்லியன் ரூபாயும், 2022ஆம் ஆண்டு டிசெம்பர் வரையில் 550 பில்லியனாக அதன் நட்டம் அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்தார்.

சமுர்த்தி நிவாரணங்களை வழங்குவதற்கு வருடமொன்றுக்கு 50 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது. இதன்படி இலங்கை மின்சார சபையின் வருடமொன்றுக்கு ஏற்படும் நட்டத்தோடு ஒப்பிடும்போது 11 தடவைகள் நாட்டு மக்களுக்கு சமூர்த்தி நிவாரணங்களை வழங்க முடியும் எனவும் கூறினார்.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டும். அதற்குப் பதிலாக அவற்றை விற்பனை செய்யக்கூடாது. அரசியல் ரீதியாகவும் மறுசீரமைப்பு ஏற்பட வேண்டும். அதுவே முக்கியம். இதுவே சிஸ்டம் சேஞ். பாராளுமன்றத்துக்கு நிதி அதிகாரத்தை வழங்க வேண்டும். இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவை அமைத்து சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற நாடுகளில் இலஞ்ச, ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதுபோல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கு மொட்டுக் கட்சியினர் தயாரா? எனவும் வினவினார்.

# அதானி நிறுவனத்துக்கு அனுமதி

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இலங்கை மின்சார சபை மற்றும் நிலையான அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடிய வேளையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதானி கிரீன் எனர்ஜி திட்டத்துக்கு அமைய மன்னாரில் 286 மெகாவோட் மற்றும் பூநகரியில் 234 மெகாவோட் திறன் கொண்ட 2 காற்றாலை திட்டங்களுக்கு 500 மில்லியன் டொலர் முதலீட்டிற்கு தற்காலிக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மின்சார சபையின் சட்ட திருத்தங்களால் தாமதமான 46 திட்டங்களில் 21 திட்டங்களுக்கான நடைமுறைப்படுத்தல்களுக்கு அடுத்த வாரம் கையெழுத்திடப்படும் என்று அமைச்சர் காஞ்சன தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

## சீன –இலங்கை ஒத்துழைப்புகளில்

# மூன்றாம் தரப்பு தடையாக இருக்கக்கூடாது

'யுவான் வாங் 5' கப்பலின் இலங்கை விஜயத்தை காரணங்காட்டி சில நாடுகள் கொழும்பிற்கு அழுத்தம் கொடுப்பதும், அதன் உள் விவகாரங்களில் முழுமையாக தலையிடுவதும், பாதுகாப்புக் கவலைகள் என கூறுவதும் முற்றிலும் நியாயமற்றது. சீனாவின் நடவடிக்கைகளுக்கு எந்தவொரு மூன்றாம் தரப்பினரும் தடையாக இருக்கக் கூடாது என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வெங் வென்பின் தெரிவித்துள்ளார்.

யுவான் வாங் 5 கப்பல், இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த நேரத்தில் இருந்தே கடுமையான விமர்சனங்கள் எழுந்திருந்த நிலையில், அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தீவிர ஒத்துழைப்புடன், இந்தியா ,அமெரிக்காவின் கவலைகளுக்கு மத்தியில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் யுவான் வாங் 5 கப்பல் நங்கூரமிடப்பட்டுள்ளது. யுவான் வாங்-5 கப்பலின் கடல் அறிவியல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்திற்கு உற்பட்டவை என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன் என கூறியுள்ள அவர்,

இது வழக்கமான சர்வதேச நடைமுறையாகும். மாறாக இது எந்த நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களை பாதிக்காது. இது எந்தவொரு மூன்றாம் தரப்பினராலும் தடுக்கப்படக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். யுவான் வாங் 5 கப்பல் விஜயத்தை காரணமாக கொண்டு சில நாடுகள் கொழும்பிற்கு அழுத்தம் கொடுப்பதும், அதன் உள் விவகாரங்களில் முற்றிலும் தலையிடுவதும், பாதுகாப்புக் கவலைகள் என்று கூறுவதும் முற்றிலும் நியாயமற்றது எனவும் அவர் கூறியுள்ளார் .

# அமைச்சுப் பதவிகளை ஏற்காது வெளியில் நின்று ஆதரவளிப்போம்

மலையக மக்கள் முன்னணி தீர்மானித்திருப்பதாகவும் இது தொடர்பான கடிதம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்பொழுது சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இது தொடர்பான கலந்துரையாடல் கூட்டமொன்றை மலையக மக்கள் முன்னணி ஹட்டனில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தற்பொழுது நாட்டில் எற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு காரணமாக அனைத்து மக்களும் பாரிய அளவில் பொருளாதார ரீதியாக பாதிப்படைந்துள்ளார்கள்.

தற்பொழுது இருக்கின்ற பொருளாதார நிலையில் எந்தவிதமான அபிவிருத்தியையும் முன்னெடுக்க முடியாத ஒரு நிலைமையே காணப்படுகின்றது.மேலும் சர்வகட்சி அரசாங்கத்தில் குறைந்த அளவிலான அமைச்சர்களே நியமிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாட்டு மக்களும் போராட்டக்காரர்களும் விரும்புகின்றார்கள்.சர்வதேசமும் அதனையே விரும்புகின்றது.எனவே அதற்கு வழிவிட்டு நாம் விட்டுக் கொடுப்புடன் ஏனையவர்களுக்கு எடுத்துக்காட்டாக நடந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

சர்வகட்சி அரசாங்கத்தை மேலும் சிக்கலில் கொண்டு செல்லாமல் நாம் வெளியில் இருந்து கொண்டு முழுமையான ஆதரவை வழங்கி மக்களுக்கு நல்லது நடப்பதை உறுதி செய்ய வேண்டிய தேவையே இருக்கின்றது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தமிழ் முற்போக்கு கூட்டணி அமைக்கப்பட்டதன் காரணமே கொள்கையுடன் நாம் செயற்பட வேண்டும் என்பதே.இந்த கூட்டணி எந்த காரணம் கொண்டும் சிதைந்துவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைத்து கட்சிகளுக்கும் இருக்கின்றது.நாம் எமது மக்களின் நன்மை கருதி இந்த கூட்டணியை பாதுகாக்க வேண்டிய தேவை எம் அனைவருக்கும் இருக்கின்றது.அந்த கூட்டு பொறுப்பை நாம் மதித்து நடக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் நாம் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யக்கூடாது என்ற காரணத்தினாலேயே டலஸ் அழகப்பெருமவிற்கு வாக்களித்தோம். எனவே, அன்று ஒரு கொள்கையும் இன்று ஒரு கொள்கையுடனும் செயற்பட முடியுமா? என்றும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

மலையக மக்கள் முன்னணி கொள்கைக்காக உருவாக்கப்பட்ட ஒரு கட்சியாகும்.எனவே, நாம் முற்போக்கு கூட்டணியாகவும் கொள்கையுடன் செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இந்த முடிவுகளை நாம் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு அறிவிக்க வேண்டும் எனவும் இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

# ஐ.தே.க–பெரமுனவுக்கு இடையில் முரண்பாடு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில், குளிர்கால யுத்தமொன்று இடம்பெறுவதாக அறியமுடிகின்றது.

மாகாணங்களுக்கு ஆளுநர்களை நியமிக்கும் விடயத்திலேயே இவ்விரு கட்சிகளுக்கும் இடையில் கடுமையான முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

ஆளுநர்களாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலரை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளார். எனினும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் சிலரின் பெயர்களை பரிந்துரை செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் முன்னாள் அமைச்சர்களான தயா கமகே, ஜோன் அமரதுங்க, நவீன் திஸாநாயக்க உள்ளிட்டவர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

எனினும், கடந்த ஆட்சியின் போது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் நியமிக்கப்பட்டிருக்கும் ஆளுநர்களை மாற்றவேண்டாம் என்று பெரமுன வலியுறுத்தியுள்ளது. இதனையடுத்தே இவ்விரு கட்சிகளுக்கும் இடையில் கடுமையான முரண்பாடுகள் தோற்றியுள்ளன என அறியமுடிகின்றது.

# 80 சதவீதம் வரியில்லா ஏற்றுமதி

புதிய திட்டத்தின் கீழ், 80 சதவீதத்துக்கும் அதிகமான ஏற்றுமதிப் பொருட்களுக்கான வரியில்லா ஏற்றுமதி மூலம் இலங்கை தொடர்ந்து பயனடையும் என்பதுடன், மேலும் 150க்கும் மேற்பட்ட கூடுதல் பொருட்களுக்கான வரிகளும் நீக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.பி, என்பது 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் பெறுமதியான வருடாந்த வர்த்தகச் சலுகையாகும், இது இலங்கையின் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுக்கான ஏற்றுமதிகளை முக்கியமாக ஆடைத் துறையில் அதிக அந்நிய செலாவணி வருமானம் ஈட்டியுள்ளது. இலங்கையின் ஜி.எஸ். பி பிளஸ் மற்றும் (GSP) பிளஸ்ஸிற்கான அணுகல் ஏற்கனவே நீடிப்பதற்காக பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது, ஏனெனில் இலங்கை வழங்கிய பல உறுதிமொழிகள் மீறப்பட்டதனால் அவை கைவிடப்பட்டுள்ளது. முக்கியமாக மனித உரிமைகள் தொடர்பாக சரியான வழிமுறைகளை இலங்கை கடைப்பிடிக்கத் தவறிவிட்டதாக சர்வதேச நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

## மண்ணெண்ணை பிரச்சினைக்கு

# இந்தவார இறுதியில் தீர்வு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கடற்தொழிலாளர் எதிர்கொள்ளும் மண்ணெண்ணை பிரச்சினைக்கு இந்தவார இறுதியிலிருந்த தீர்வு கிடைக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று (17) இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கெனவே, பல்வேறு பாதிப்புக்களையும், பொருளாதாரத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், கடல்சார் உணவினை பெற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு விலை அதிகரித்து காணப்படுவது தொடர்பில் அமைச்சரிடம் வினவப்பட்டது. அதற்கு பதிலளித்த அமைச்சர்,

இந்த பிரச்சினை இருப்பது உண்மைதான். இந்த நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதனால் எமது மக்கள் அதிகளவான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். அதற்கு தீர்வு காணும் வகையில் எரிபொருளை தாராளமாக கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கடற்தொழிலாளர்களை பொறுத்தவரையில், சிறு கடற்தொழிலாளர்களிற்கு மண்ணெண்ணை ஒரு தட்டுப்பாடாக இருக்கின்றது. சற்று முன்பும் கொழும்புடன் தொட்டுகொண்டு



தனியாரால் மண்ணெண்ணை இறக்கப்படுவது தொடர்பில் தற்போது உள்ள நிலை தொடர்பில் கலந்துரையாடியுள்ளேன்.

அதேவேளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தபனமும் மசகு எண்ணையை வடித்து மண்ணெண்ணையாக விநியோகிப்பதற்கான நடவடிக்கையும் நடைபெற்றக்கொண்டிருக்கின்றது. இந்த வார இறுதியில் கைகூடும் என்று நம்புகின்றேன்.

மதிதிய அரசின் அமைச்சராக இருந்தாலும், நன்நீர் மீன்பிடியை அதகரிப்பதற்கான முயற்சி மத்திய அரசினால் முன்னெடுக்கப்படுகின்றதா என அவரிடம் வினவியபோது,

நாடு தளுவிய ரீதியில் அந்த திட்டத்தை நாய்கள் கொண்டு வருகின்றோம். கிளிநொச்சி மாவட்டத்தில் முறிப்பு எனும் இடத்தில் 30 சிறு குளங்கள் உள்ளது. அதில் 5 குளங்களை புதுப்பித்திருக்கின்றோம் என்றார்.

# அமர்ந்து அமரரானார்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் உள்ள தனது நண்பனின் வீட்டுக்கு வந்து கதிரையில் அமர்ந்தவர் சிறிது நேரத்தில் திடீரென மயங்கி சரிந்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கோப்பாயை சேர்ந்த பாலசுப்பிரமணியம் ஐயர் கணநாதசர்மா (வயது 34) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உடனடியாக வீட்டார் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதிலும், அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் அறிக்கையிட்டனர்.

## ரூ.245 மில். பெறுமதியான கொக்கெய்னுடன்

# வெளிநாட்டு பிரஜை கைது

245 மில்லியன் ரூபாய் பெறுமதியான கொக்கெயின் போதைப்பொருளுடன் வெளிநாட்டு பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கொலம்பியாவில் இருந்து கியூ.ஆர். 662 என்ற விமானத்தில் வந்துள்ளதாக இலங்கை சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தொலைநகல் இயந்திரங்களுக்கு பயன்படுத்தப்படும் காகித உருளைகளில் மறைத்து வைத்து சுமார் 05 கிலோ கிராம் போதைப்பொருளை சந்தேக நபர் கொண்டு வந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக இலங்கை சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது



## கனடா – இலங்கை

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்து

WUSC தன்னார்வ ஒத்துழைப்புத் திட்டத்தை 2020-2027 நடைமுறைப்படுத்துவதற்காக கனடாவும் இலங்கையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த வேலைத்திட்டம் இலங்கையின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதுடன் எமது இரு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான உறவுகளை வளர்க்கும். IGNI+E ஆனது பெறுமதிவாய்ந்த தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதுடன் கனேடிய மற்றும் இலங்கை பங்கேற்பாளர்களுக்கு இடையில் மேம்பட்ட ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை உருவாக்கும் என இதன்போது கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் குறிப்பிட்டார்.

இந்த ஏழாண்டு முன்னெடுப்பானது (2020-2027) கனடாவின் உலக பல்கலைக்கழக சேவையால் (WUSC) நடைமுறைப்படுத்தப்படுகிறது. வறிய மற்றும் ஓரங்கட்டப்பட்ட இளைஞர்களுக்கு, குறிப்பாக இளம் பெண்களுக்கு, நிலையான, புத்தாக்கமிகுந்த மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வகையில், முன்னெடுப்புகளைச் செயல்படுத்தவும், சேவைகளை வழங்கவும் உள்ளூர் பங்காளிகளுக்கு இது உதவும். வளமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கான கனடாவின் நிலையான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக, இலங்கையின் அபிவிருத்தியில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான பங்களிப்பை WUSC வழங்கி வருகின்றது.



## இலங்கையில் சீனக் கப்பல்

# கடல் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ள இந்தியா

■ எம்.றொசாந்த்

தமிழகத்தின் ராமேஸ்வரம் கடல் பகுதியில் இந்திய கடற்படையினர் ஹெலிகாப்டர் மூலம் கண்காணிப்பு நடவடிக்கையை தீவிரபடுத்தப்படுள்ளதாக இந்தியத் தகவல் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி சர்ச்சைக்குரிய சீன தொழில்நுட்ப ஆய்வுக் கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்நிலையில்; இந்திய கடற்படைக்கு சொந்தமான ஹெலிகாப்டர் ராமேஸ்வரம், தனுஷ்கோடி கடல் பகுதியில் தாழ்வாக பறந்து கண்காணிப்பதுடன் இந்திய கடற்படை வீரர்கள் ஹெலிகாப்டரில் இருந்து கயிறு மூலம் கடலில் இறங்கி பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்

இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல்படையினர் சர்வதேச கடல் எல்லையில் அந்நிய ஊடுருவல் சட்டவிரோத கடத்தல் சம்பவங்கள் மற்றும் இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் நுழையும் அகதிகளின் நடமாட்டம்



உள்ளிட்டவற்றை முழுமையாக கண்காணித்து வருகின்றனர்.

அந்நிய ஊடுருவலை கண்காணிப்பதற்காக சர்வதேச கடல் எல்லை பகுதிகள் ஹெலிகாப்டர்கள் மூலம் தீவிர கண்காணிப்பு வலயத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நேற்று முன்தினம்(16) காலை முதல் ஹெலிகாப்டர்கள் கடலில் தொடர்ந்து தாழ்வாக கண்காணித்து வருகின்றன.

மேலும் இந்திய கடலோர காவல்படைக்கு சொந்தமான கப்பல்கள் மற்றும் இந்திய கடற்படைக்கு சொந்தமான ரோந்து கப்பல்கள் சர்வதேச கடல் எல்லையில் நிறுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிப்பு பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ரணிலும் கை தர வேண்டும்

■ பா.நிரோஸ்



எதிர்க்கட்சியாக இதுவரை எவரும் செய்யாததையே நாம் செய்திருக்கிறோம். நாட்டுக்கு தேவையான முழு ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்கும் நாம் தயார். கரகோசம் எழுப்புவதற்காக ஒரு கையை நாம் வழங்கியிருக்கிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கையை வழங்கினால் மாத்திரமே கரகோசத்தை எழுப்ப முடியும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (17) நடைபெற்ற பொருளாதார கேந்திர நிலையத்தின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார். சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை கடலில் தூக்கியெறிய வேண்டும் என சிலர் கூறியிருக்கிறார்கள். சரி அப்படியென்றால் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள் என்ன என்பதை அவர்கள் கூற வேண்டும். நாடு தவறான பாதையில் பயணித்தமையாலேயே நாடு வங்குரோத்தடைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு தேவையான வகையில் நாட்டை நிர்வகிக்க வேண்டும் என எவரும் கூறவில்லை எனவும், பெற்றுக்கொண்டுள்ள கடனை மறுசீரமைப்பதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு முன்னர், பொருளாதார மறுசீரமைப்புக்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக அவர்களுக்குக் கூற வேண்டும். அதனை உறுதி செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தேவை எனவும் தெரிவித்தார்.

இலங்கை சர்வதேச மட்ட நம்பிக்கையை இழந்துவிட்டது. நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுவரையில் முன்வைக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியே முன்வைத்துள்ளது. மாற்று திட்டங்கள் எதனையும் இதுவரையில் எவரும் முன்வைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.



## குருசபாடு கடற்பரப்பில்

# 10 பேர் கைது

நாட்டிலிருந்து சட்டவிரோதமாக குடியேறமுயற்சித்த 10 பேர் தலைமன்னாரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமன்னார் குருசபாடு கடற்பரப்பில் நேற்று முன்தினம் (16) இரவு இலங்கை கடற்படையினர் முன்னெடுத்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகத்துக்கு இடமானமுறையில் பயணித்த டிங்கி படகு ஒன்று இலங்கைக்கு சொந்தமான பி175 கரையோர ரோந்துக் கப்பலினால் சுற்றிவளைக்கப்பட்டது. அதன் போது, அந்த டிங்கி படகில், 18 வயதுக்கு மேற்பட்ட நான்கு (04) ஆண்கள், இரண்டு பெண்கள் (02) மற்றும் 18 வயதுக்கு குறைவான நால்வரும் படகை இயக்கிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் பேசாலை, உறுமலை, கிளிநொச்சி மற்றும் கந்தளாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்துள்ள இலங்கை கடற்படை, பணம் சம்பாதிப்பதற்காக பாதுகாப்பற்ற கப்பல்களை பயன்படுத்தி கடத்தல்காரர்கள் ஏற்பாடு செய்துள்ள மனித கடத்தலில் சிக்கி, நாட்டிலிருந்து சட்டவிரோதமாக இடம்பெயர முயற்சிப்பது மற்றும் உயிரை பணயம் வைத்து சட்டத்தின் முன் தண்டிக்கப்படுவதை தவிர்க்குமாறு கடற்படை பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# அநுரவின் ஆதரவு இல்லை

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியிருப்பதன் மூலம் பாராளுமன்றம் எந்தளவுக்கு திரிபடைந்துள்ளது என்பது தெட்டத்தெளிவாக தெரிகிறது எனத் தெரிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய, அதனாலேயே, தேர்தலுக்குச் செல்ல வேண்டுமென தாம் வலியுறுத்துகின்றோம் என்றார்.

சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்ற தீர்மானத்தை தேசிய மக்கள் சக்தி எடுத்துள்ளது. சர்வகட்சி அரசாங்கம் ஒன்று நாட்டில் ஏற்படாது. ரணில் - ராஜபக்ஷர்களின் குழுக்களால் அமைக்கப்பட்ட அரசாங்கமே இருக்கப்போகிறது எனவும் தெரிவித்தார்.



ரணில் - ராஜபக்ஷவின் அரசாங்கத்தை நியாயப்படுத்துவதற்காக ஏனைய கட்சிகளையும் அவர்களது அரசாங்கத்தில் இணைய சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் தமது கொள்கைகளையே முன்வைத்துள்ளார்கள். வேறொருவரின் கொள்கைகளை நிறைவேற்ற வேண்டிய தேவை எமக்குக் கிடையாது எனவும் கூறினார்.

நாட்டில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியாது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியிருப்பதால் நாட்டின் பாராளுமன்றம் எந்தளவுக்கு திரிபடைந்துள்ளது என்பது தெரிகிறது. அரசியலமைப்பு ரீதியாக நடப்பதாகக் கூறினாலும் அரசியலமைப்புக்குள் ஒழிந்துக்கொண்டே இவற்றை செய்கிறார்கள் என்றார்.

# மம்முட்டி –சனத் சந்திப்பு

சுற்றுலா மேம்பாட்டு தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் கிரிக்கட் வீரர் சனத் ஜெயசூரிய, இலங்கைக்கு வருகை தந்துள்ள தென்னிந்திய நடிகர் மம்முட்டியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.



# அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும்

■ பா.நிரோஸ்



நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு முதலில் நாட்டிலிருந்து இலஞ்ச, ஊழல் செயற்பாடுகளை முற்றாக ஒழிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (17) நடைபெற்ற பொருளாதார கேந்திர நிலைய ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

தவறான கொள்கைகளாலேயே நாடு நாசமாகியுள்ளது. எரிபொருளின் விலை சர்வதேச சந்தையின் விலையை வைத்து நேரடியாக தீர்மானிக்கப்பட வேண்டும். அதேபோல் அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். இதில் இரு கருத்துகளுக்கு இடமில்லை எனவும் தெரிவித்தார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டும். சமூர்த்தி நிவாரணங்களில் அரசியல் தலையீடுகளே காணப்படுகின்றன. யாருக்கு சமூர்த்தியை வழங்குவது என்பதை அரசியல்வாதிகள் தீர்மானிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்பு வேண்டும் என்றால் இலஞ்ச, ஊழல் செய்றபாடுகளை முற்றாக நாட்டில் ஒழிக்க வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதாக இருந்தால் ஊழல் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# எந்நேரத்திலும் தடை செய்வோம்

■ பா.நிரோஸ்



தடை நீக்கப்பட்டுள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு சந்தர்ப்பத்தை வழங்கிப்பார்க்க வேண்டும். ஆனால் பயங்கரவாதச் செயற்பாடுகளில் அந்த அமைப்புகள் ஈடுபட்டால் எந்நேரத்திலும் மீள தடை விதிக்கப்படும் என ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

உலக நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். யுத்தத்தை நிறைவு செய்து நாட்டில் அமைதியை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுமே ஏற்படுத்தினார்கள். எனினும் நாட்டில் நீண்டக்கால அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

பயங்கரவாத அமைப்புகள் என குற்றச்சாட்டுக்களை சுமத்தி தடை செய்யப்பட்ட அமைப்புகள், சட்டரீதியாக தங்களை பயங்கரவாதிகள் இல்லை என நிரூபித்து தடைகளை அகற்றிக்கொண்டால் அதில் பிரச்சினை இல்லை எனவும் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்றே புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்காலத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். குறைந்தது வடக்கு, கிழக்கு மாகாணங்களையாவது அவர்கள் அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும் கூறினார். எ

# தவறான செய்தியாகும்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் மூலம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதாக கூறப்படுகின்ற கட்டுரையொன்றின் சிங்கள மொழிபெயர்ப்பு இணையத்தளங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியிடப்பட்டு வருகின்றது.

எடுத்துக்காட்டாக, “பணவீக்கம் என்பது பிரச்சனையொன்றல்ல ஆனால் தீர்வொன்றாகும். இப்பொருளாதார நெருக்கடி எங்களுக்கேற்பட்ட சிறந்த விடயமொன்றாகவிருக்கலாம் - மத்திய வங்கியின் ஆளுநர் கூறுகின்றார்” என்ற தலைப்பின் கீழ் அல்லது இதேபோன்ற தலைப்புகளின் கீழ் கட்டுரைகள் அண்மையில் சமூக வலைத்தளங்களில் பரந்தளவில் வெளியிடப்படுகின்ற பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. ஆனால் இது தவறான செய்தி என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் பெயரில் வேறு தனிப்பட்டவர்களால் எழுதப்பட்ட “பணவீக்கம் என்பது பிரச்சினையொன்றல்ல ஆனால் தீர்வொன்றாகும்” என்ற தலைப்பிலான கட்டுரைக்கு பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

வவுனியாவில் பைசர்

# தடுப்பூசி ஏற்றல் மீள ஆரம்பம்

■ க. அகரன்

வவுனியாவில் கொரோனா தொற்று ஏற்பட்டு வருவதால், பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்று நாட்டில் அதிகரித்து வருகின்றது. இம் மாதம் வவுனியாவில் கொரோனா மரணம் ஒன்று பதிவாகியிருந்ததுடன், பலர் கொரோனா தொற்றுக்குள்ளாகி




உள்ளனர்.

இதன்காரணமாக, கொரோனா தொற்று தீவிர நிலையை அடையாது தடுக்கும் நடவடிக்கையாக, பைசர் தடுப்பூசிகள் மீள ஏற்றப்படவுள்ளன.

இதுவரை தடுப்பூசிகளை முறையாகப் போடாதவர்கள், (1,2,3,4) தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

அந்தவகையில், வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை தடுப்பூசிகளைப் பெற முடியும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளதுடன், சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும் கோரியுள்ளனர்.

# யாழ். போதனாவுக்கு அங்கஜன் விஜயம்

■ விநிதர்ஷன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நெருக்கடி கால செயற்பாடுகள் மற்றும் உள்ளக நிலைவரங்களை ஆராயும் விதமாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன், நேற்று (17) யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டார். வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் ரி.சத்தியமூர்த்தியை சந்தித்த அவர், வைத்தியசாலை நிலைமைகளை ஆராய்ந்ததோடு, வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதன்போது, வைத்தியசாலை எதிர்கொள்ளும் இடப்பற்றாக்குறை, நோயாளர் விடுதிகளின் விஸ்தரிப்பு, மேலதிக சிகிச்சை மையங்களின் தேவைகள், வைத்தியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான வசதிகள் தொடர்பாக பணிப்பாளரால் எடுத்துரைக்கப்பட்டன.

வைத்தியசாலைக்குத் தேவையான இணைந்த சேவைகளை வழங்கும் மையங்களை உருவாக்குதல், வைத்தியசாலையின் உள்ளக மற்றும் வெளியக விஸ்தரிப்பு பணிகள் என்பன எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், அவற்றுக்கான பூர்வாங்க பணிகள் தொடர்பிலும் இச்சந்திப்பில் உரையாடப்பட்டன.

மேலும், வைத்தியசாலைக்கு அண்மித்துள்ள நிலங்களை உரிமையாளர்களிடம் கோரிப்பெற்று, புலம்பெயர் கொடையாளிகளின் உதவியோடு வைத்தியசாலைக்குத் தேவையான பிரிவுகளை அமைக்க முடியும் எனவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், யாழ். நகரப்பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டமொன்றை, போதனா வைத்தியசாலைக்கு பயன்சேர்க்கும் வகையில் முன்னெடுப்பது தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

இதுதொடர்பான திட்டமுன்மொழிவை உருவாக்கும் நோக்கில், முத்தரப்பு சந்திப்பொன்றை விரைவில் நடத்த தீர்மானித்துள்ளதாக அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், ஆளணியை அதிகரிப்பது தொடர்பிலும் உரையாடப்பட்டதுடன், இலங்கை தாதியர் சேவையில் 95% பெண்கள், 5% ஆண்கள் என்ற ஆட்சேர்ப்பு வீதத்தில் கொள்கைரீதியான மாற்றம் கொண்டுவரப்படுகையில், ஆண் தாதியர்களை அதிகமாக சேவையில் உள்ளீர்க்க முடியும் எனவும் யோசனை முன்வைக்கப்பட்டது.

# நிழல்கள் சொல்லும் கதைகள்

## நூல் வெளியீடு

■ மு.தமிழ்ச்செல்வன்


கிளிநொச்சி, வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் அ.பங்கையற்செல்வனின் 'நிழல்கள் சொல்லும் கதைகள்' நூல் வெளியீடு, கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நாளை (19) பிற்பகல் 03 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் பங்கையற்செல்வனால் எடுக்கப்பட்ட புகைப்படங்களுக்கு மாணவர்கள் எழுதிய கதைகளை கொண்டமைந்ததாக இந்நூல் காணப்படுகின்றது.

காவேரி கலா மன்றத்தின் இயக்குநர் அருட்தந்தை ரி.யோசுவாவின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் வரவேற்புரையை ப.கஜிந்தனும் நூல் அறிமுக உரையை கவிஞர் கருணாகரனும் நூலுரையை வைதேகி நரேந்திரன், இராஜேஸ்கண்ணா, ஸ்ரீபன் சஞ்சிகன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி நூலினை வெளியிட்டு வைக்கவுள்ளார்.




# கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலான கலந்துரையாடல், கிளிநாச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள், அதிகாரிகள், அதிபர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாவட்டத்தில் கல்விசார் விடயங்களில் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.



இடைக்கட்டு பகுதியில்

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம், இடைக்கட்டு பகுதியில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு, அங்கிருந்து பெருந்திரளான கசிப்பு மற்றும் கோடா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக, பொலிஸ் குழுவொன்று நடத்திய



சுற்றிவளைப்பின் மூலம், இந்தக் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது கசிப்பு உற்பத்தியை மேற்கொள்வதற்காக பயன்படுத்திய பரல்கள் மற்றும் அதற்கான உபகரணங்கள் உள்ளடங்களாக 180 லீற்றர் கோடாவும் 170 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த முற்றுகையின் போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவர் தப்பியோடியுள்ளனர்.

# யூரியாவில் பாரபட்சம்

## ஆளணி இன்றி அலுவலகம் தவிப்பு; விவசாயிகள் திண்டாட்டம்

■ சகா

காரைதீவு கமநல பிரிவுக்குட்பட்ட 1,442 ஏக்கர் காணிக்குரிய 636 விவசாயிகள், யூரியா கிடைக்கப் பெறாமல் திண்டாடுகின்றார்கள்.

காரைதீவின் நான்கு கண்டங்களைச் சேர்ந்த 636 விவசாயிகள், யூரியா வழங்கலில் புறக்கணிப்பு தொடர்பாக ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டு வருகிறார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் அறுவடை இடம்பெற்ற நிந்தவூர், மகாஓயா, பல்லன்ஓயா போன்ற பிரதேசங்களுக்கு யூரியா வழங்கப்பட்டபோதிலும் அறுவடை இன்னும் 50 சதவீதம் நடைபெறாமலுள்ள காரைதீவு போன்ற பகுதிகளுக்கு யூரியா மறுக்கப்படுவது ஏன் என



விவசாயிகள் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

அதேவேளை, இப்போகத்தின்போது கறுப்புச் சந்தையில் 40,000 ரூபாய்க்கு விற்கப்பட்ட யூரியாவைப் பயன்படுத்திய விவசாயிகளுக்கு, விளைச்சல் வெகுவாக குறைந்து காணப்பட்டது. அதற்கு காரணம், யூரியாவில் உப்பு கலக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதைக் கண்டறியும் முகமாக கண்டியிலிருந்து விவசாயத் திணைக்கள ஆராய்ச்சி உயர் அதிகாரிகள், அம்பாறைக்கு வந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, காரைதீவு கமநல சேவை நிலையத்தில் 04 ஊழியர்கள் மட்டுமே சிரமத்தின் மத்தியில் பணியாற்றுகின்றனர்.

இங்கு பணியாற்றிய 03 உத்தியோகத்தர்கள், ஒரு மாத காலத்துக்கென தற்காலிகமாக வேறு பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டபோதிலும், ஒரு வருடமாகியும் இன்னும் அவர்கள் இங்கு நியமிக்கப்படாமை குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அலுவலகத்தில் ஆளணித் தட்டுப்பாடு நிலவுகிறது. விவசாயிகளின் கருமங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

# ஓட்டோ விபத்தில் மூவர் படுகாயம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பிரதான வீதியில் வைத்து ஓட்டோவொன்று, மின் கம்பத்தில் மோதியதில் அதில் பயணித்த மூவர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த குடும்பம், நேற்று முன்தினம் (16) ஓட்டோவில் கல்முனைக்குச் சென்று



திரும்பும் போதே, இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்தில் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ் விபத்தில் காயமடைந்தவர்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதோடு, மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பௌத்தமயமாக்கலை நிறுத்துமாறு

# செங்கலடியில் ஆர்ப்பாட்டம்

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் பௌத்தமயமாக்கல் திட்டம் மற்றும் தமிழர்களின் பொருளாதாரத்த அழிக்கும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரி, மட்டக்களப்பு, செங்கலடியில் நேற்று (17) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, கால்நடை பண்ணையாளர்கள், பொது அமைப்புகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தன.

செங்கலடி சந்தியில் ஒன்றுகூடிய மக்கள், 'அத்துமீறிய காணி அபகரிப்பை நிறுத்து', 'மயிலத்தமடு, மாதவனையில் தமிழர்களின் கால்நடைகளை அழிக்காதே', 'பௌத்தமயமாக்கலை நிறுத்து', 'உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட நிதி அமைப்புகள்





ஊடாக பெறப்படும் கடன்களைக் கொண்டு தமிழர்களின் பொருளாதாரம் திட்டமிட்டு அழிக்கப்படுவதால் கடன்களை நிறுத்து' போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு, கோசங்களையும் எழுப்பினார்கள்.

மயிலத்தமடு, மாதவனையில் நூறு வருடங்களுக்கு மேல் கால்நடைகளை தமிழர்கள் மேய்த்துவரும் நிலையில், அப்பகுதியில் உள்ள தமிழ் கால்நடை பண்ணையாளர்களை அகற்றி, அங்கு பௌத்த மயமாக்கலை செய்யும் நடவடிக்கைகளை மகாவலி அபிவிருத்தி சபை முன்னெடுப்பதாகவும் இங்கு குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் உட்பட பண்ணையாளர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்ட மகஜரும் இதன்போது வாசிக்கப்பட்டது.


குச்சவெளி இளைஞர், யுவதிகளுக்கு

# ஆங்கில அறிவை மேம்படுத்தல்

■ எப்.முபாரக்

குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட சலப்பையாறு பகுதியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் படையணி (யூத்கோப்ஸ்) நிறுவனத்தின் மூலம் குச்சவெளி பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல், குச்சவெளி இளைஞர் படையணியின் பொறுப்பதிகாரிக்கும், குச்சவெளி பிரதேச தவிசாளருக்குமிடையில் நேற்று (17) இடம்பெற்றது.

குச்சவெளி பிரதேச சபையின் தலைமையகத்தில் தவிசாளர் ஏ.முபாறக் தலைமையில் இந்தக்



கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது குச்சவெளி தவிசாளரால் பிரதேச சபைக்குட்பட்ட இளைஞர், யுவதிகளின் நலன் கருதி, அவர்களின் தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆங்கில அறிவை வளர்க்கும் முகமாக ஆங்கிலம், கணினி கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேற்படி அதிகாரி, அதற்கான ஏற்பாடாக மிக விரைவில் நேர்முக தேர்வை நடத்தி, பயிற்சிக்காக இளைஞர், யுவதிகளை தெரிவுசெய்வதாகவும் தவிசாளரிடம் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் படையணியின் செயற்பாடுகளுக்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் இதன்போது தெரிவித்தார்.

# வீட்டுக்கான அடிக்கல் வைப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

'திரிய பியச' வீட்டு வேலைத்திட்டத்தின் கீழ், பாலமுனை, சின்னப்பாலமுனை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள வீடு ஒன்றுக்கான அடிக்கல் வைக்கும் வைபவம், நேற்று (17) நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல் இமாமுடீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ



சாபீர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவைத்தார். சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் 06 இலட்சம் ரூபாய் செலவில் இவ் வீடு நிர்மாணிக்கப்பட உள்ளதாக, பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ சாபீர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் எப். நஹீஜா முசாபீர், பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம் ஹமீட், முகாமைத்துவ பணிப்பாளர் ஐ.யூ நபிஸா, திட்ட முகாமையாளர் எஸ்.எல் அஸீஸ் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இ.போ.ச பஸ் சரிந்ததால்

## 4 மணிநேரம் அந்தரிப்பு

எம்.கிருஸ்ணா

நோர்டன் - ஹட்டன் வீதியின் காசல்ரீ கொலனிக்கு அருகில் இடம்பெற்ற இ.போ.ச பஸ் விபத்தில் குறித்த வீதியுடனான போக்குவரத்து தடைபட்டது.

நேற்று (17) காலை 7.15 மணியளவில் லக்ஸபானயிலிருந்து ஹட்டன் நோக்கி பயணித்த பஸ்ஸே விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. எனினும் குறித்த பகுதியில் சிறிய வாகனங்கள் மாத்திரமே செல்லக்கூடியதாக இருந்தது.

இதனால் ஒஸ்போனிலிருந்து ஹட்டன் செல்லும் பஸ்கள், காசல்ரீ சந்தியில் இருந்தே பயணத்தை ஆரம்பித்தன.

அத்துடன் , ஹட்டன் -கொத்தலன லக்ஸபான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

மேலும் ஒஸ்போனிலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தூரம் வரையில் நேற்று (17) காலை மாணவர்கள், தொழிலுக்குச் செல்வோர் என பலரும் போக்குவரத்து இன்மையால் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

இந் நிலையில், ஹட்டன் டிப்போ திருத்தப்பணி ஊழியர்களினால் 10.30 மணியளவில் விபத்துக்குள்ளான பஸ்ஸினை அகற்றிய பின் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.



## மோகினி எல்லையில்

ஒகஸ்ட் 1ஆம் திகதி திங்கட்கிழமை பெய்த அழைமழை காரணமாக மஸ்கெலிய நல்லத்தண்ணீர் பிரதான வீதியின், மோகினி எல்லைப்பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதுடன், வீதிக்கு மேலும், கீழும் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டன.
இதனால், அப்பகுதி கடந்த 17 நாட்களாக மூடப்பட்டுள்ளது. அவ்வீதியின் ஊடாக பயணிப்பவர்கள் மலைப்பாங்கான பகுதியில் ஏறியே, அவ்விடத்தை கடக்கின்றனர்.

நோட்டன்பிரிட்ஜ்– கினிகத்தேனை போக்குவரத்து

## வழமைக்குத் திரும்பியது

செ.தி.பெருமாள், காமினி பண்டார

நோட்டன்பிரிட்ஜ்- கினிகத்தேனை பிரதான வீதியின் அட்லிஸ் பகுதியில் இடம்பெற்ற மண்சரிவை அடுத்து, குறித்த வீதியூடாக இடைநிறுத்தப்பட்டிருந்த போக்குவரத்து, நேற்றிலிருந்து (17) வழமைக்குத் திரும்பியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக மண்சரிவு ஏற்பட்ட பகுதியில் புதிதாக இரும்பு பாலம் நிர்மாணிக்கப்பட்டு நேற்று (17) வாகனப் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டதென வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நோர்வூட் அலுவலகத்தின் நிறைவேற்று பொறியியலாளர் தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

பிரதேசத்தில் இந்த மாதம் முதலாம் திகதி பெய்த கடும் மழை காரணமாக, குறித்த வீதி மண்சரிவுக்கு உள்ளானதுடன் நபர் ஒருவரும் உயிரிழந்தார்.

இதனால் குறித்த வீதியுடனான போக்குவரத்து நேற்று முன்தினம் (16) வரை இடைநிறுத்தப்பட்டதுடன், புதிய பாலம் நிர்மாணிக்கப்பட்டு போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளது.



தோட்டப்புற மக்களுக்காக

# ஒன்லைன் வைத்திய சேவை

தோட்டப்புற மக்களுக்காக, ஒன்லைன் முறையின் கீழ் வைத்திய சேவைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள புதிய கிராமபுற அபிவிருத்தி அதிகாரசபையினால் செப்டெம்பர் மாதம் 01 ஆம் திகதி பதுளை, இதழ்கஸ்ஹின்னவத்த கிராமத்தை மையமாகக் கொண்டு இந்த சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் (16) தோட்டப்புற வீடமைப்பு பிரிவின் உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் தோட்டப்புற வீடமைப்பு பிரிவின் கீழ் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த அமைப்பு, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி பொறுப்புச்சபை, புதிய கிராமபுற அபிவிருத்தி அதிகாரசபை போன்ற



நிறுவனங்கள் ஆகியவை அதற்காக செயற்படவுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஆலோசனையின் பேரில் செயற்படும் இந்த ஒன்லைன் வைத்திய சேவை செயற்றிட்டம் 0 - Doc என பெயரிடப்பட்டுள்ளது.

அதற்காக ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் ரூ.100 செலவிடப்படுவதால்; முழு குடும்பத்திற்கும் அதன் மூலம் சேவையை பெற்றுக்கொள்ளலாம். இதன் அடிப்படையில் 24 மணி நேர சேவையில் 150 இற்கும் மேற்பட்ட வைத்தியர் குழுவின் ஊடாக இந்த சேவையை பெறலாம்.

எதிர்வரும் காலங்களில் இந்த வைத்திய சேவை நாட்டின் அனைத்து தோட்டப்புற பகுதிகளுக்கும் அமைக்கப்பட வேண்டுமென அமைச்சர் உயரதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.



## சேவைகள் இன்மையால் செலவுகளோ அதிகம்

செ.தி பெருமாள்

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் கடந்த சில ஆண்டுகளாக இரத்த பரிசோதனை சேவைகள் இல்லாமையால் நோயாளர்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

1972ஆம் ஆண்டு முதல் இவ் வைத்தியசாலையில் தொடர்ந்து ஆய்வு கூட சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

எனினும், கடந்த 2005ஆம் ஆண்டு தொடக்கம் அங்கு கடமையாற்றிய ஆய்வு கூட உத்தியோகத்தர் இளைப்பாறிய பின்னர் புதியவர்கள் நியமிக்கப்படவில்லை.

இதனையடுத்து இந்த வைத்திய சாலையில் இருந்த ஆய்வு கூட உபகரணங்கள் அனைத்தும் ஹங்குராங்கெத்த வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரியவருகிறது.

2015ஆம் ஆண்டு இந்த வைத்தியசாலையில் பணியாற்றிய மாவட்ட வைத்திய அதிகாரி பரிசோதனை மேற்கொள்ள ஆய்வுக் கூடத்தை ஏற்பாடு செய்து, வாரத்தில் இரண்டு நாட்கள் கிளங்கன் வைத்தியசாலையில் இருந்து ஆய்வு கூட அதிகாரி ஒருவரை வரவழைத்து பரிசோதனை நடவடிக்கையை முன்னெடுத்தாலும் தற்போது அதுவும் நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது இப்பகுதியில் உள்ள நோயாளர்கள் தமது ஆய்வு கூட பரிசோதனைகளை தனியார் ஆய்வு கூடங்களில் அதிகமான பணம் கொடுத்து செய்யும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த காலங்களில் 100 ரூபாய்க்கு மேற்கொள்ளபட்ட இரத்த பரிசோதனை தற்போது 650 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஐஸ்ஸுடன் மூவர் சிக்கினர்

பாலித ஆரியவன்ஸ

பதுளை சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி சுஜித் வெதமுல்லைக்கு கிடைத்த தகவலுக்கமைய, நேற்று (17) அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, பதுளை வீயர்புர பிரதேசத்தில் 13. 750 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சந்தேகநபர்களிடமிருந்து 35,000 ரூபாய் பணமும் டிஜிட்டல் தராசு, அலைபேசி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25, 26 மற்றும் 35 வயதுகளையுடைய ஹாலிஎல, கைலகொட மற்றும் வீயர்புர ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.



## கழுத்து நெரித்து தாய் கொலை: சகோதரர்கள் இருவருக்கு வலை

மொஹொமட் ஆஸிக்

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உகுரஸ்ஸபிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டில் தனியாக இருந்த 76 வயதுடைய தாயொருவர் துணியொன்றினால் கழுத்து நெரித்து கொலை செய்த சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நான்கு பிள்ளைகளின் தாயான 76 வயதுடைய பெண் வீட்டில் இருந்த போது, வீட்டுக்குள் நேற்று முன்தினம் (16) பகல் வேளையில் நுழைந்துள்ள சிலர், அப்பெண்ணின் கழுத்தில் இருந்த சுமார் நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதியுள்ள தங்க ஆபரணத்தை கொள்ளையடித்து விட்டு, பெண்ணையும் கொலையும் செய்து விட்டு தப்பியோடியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொலை சம்பந்தமாக கொல்லப்பட்ட தாயின் உறவினர்களான இரு சகோதரர்களை தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர். இருந்த போதும் தற்போது அவர்கள் தலை மறைவாகி உள்ளதாக தெரிவித்தனர்.

உயிரிழந்த தாயின் இறுதிக் கிரியைகள் நேற்று (17) நடைபெற்றதுடன், சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## வெடிபொருளுடன் ஒருவர் கைது

ராமு தனராஜா

ஹாலிஎல- உடுவரை பகுதியில் 50 டெட்டனைட்டுகளை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

35 வயதான சந்தேகநபர், விற்பனைக்காக வெடிபொருள்கள் வைத்திருப்பதாக ஹாலிஎல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ருவன் குணதிலகவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து, சந்தேக நபரின் வீட்டை பொலிஸார் சுற்றிவளைத்து, வெடி பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

உடுவரை பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபரை, பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

நிர்வாகங்களின் செயற்பாடுகள்

## சமூகத்தில் பிணக்குகளை உண்டாக்கும் அபாயம்

### வடிவேல் சுரேஸ் எம்.பி ஐயம்

தேசிய நிகழ்வுகளில் தமிழில் தேசிய கீதம் பாடலாம் என்ற அங்கிகாரத்தை வழங்கி சமூகத்திற்கு இடையிலான ஒற்றுமையை அரசாங்கம் வலுப்படுத்தி நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்தி கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், மலையக பெருந்தோட்ட நிர்வாகங்களின் செயற்பாடுகள் சமூகத்தில் பிணக்குகளை உண்டாக்குமோ என்ற ஐயம் எழுகின்றது என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஸ் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கருத்து தெரிவித்திருந்தார்

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

பசறை, மடுல்சீமை பெருந்தோட்டங்களில் தொழிற்சாலைகளில் கடமை



புரிந்து வந்த பாதுகாப்பு தொழிலாளர்களை இடைநிறுத்தி ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை பாதுகாப்பு கடமைகளுக்காக நியமித்திருப்பதை வன்மையாக கண்டிப்பதாகத் தெரிவித்தார்.

பெருந்தோட்ட நிறுவனங்களின் இத்தகைய செயற்பாடுகள் கீழ்தரமானவை இவற்றின் காரணமாக தொழில் இழப்பு மட்டுமின்றி சமூக ரீதியான பிணக்குகளும் ஏற்படுகின்றன. அரசாங்கத்துக்கு அடிபணியாது பெருந்தோட்ட நிறுவனங்களின் இத்தகைய தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் பெருந்தோட்ட மலையக மக்களிடையே பிரச்சினைகளையே தோற்றுவிக்கும்.

வெலிமட- வார்விக் பிரதேசத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்த காணியை, பெருந்தோட்ட நிறுவனம் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி மீள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு பல பிரச்சனைகள் பெருந்தோட்ட மலையகம் எங்கும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

பெருந்தோட்ட மலையக மக்களை பிழையாக வழி நடத்தி அவர்களை வஞ்சிக்கும் செயற்பாடுகளில் தோட்ட நிர்வாகங்கள் ஈடுபடுவதை இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

மேற்கண்ட செயல்பாடுகள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் பெருந்தோட்ட மலையக மக்களும் தொழிற்சங்க அரசியலுக்கு அப்பால் ஒற்றுமையாக செயல்படுமாறு தான் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## இலவச மருத்துவ முகாம்

எம். செல்வராஜா

‘நோயற்ற ஆரோக்கியமான சமூகத்தை கட்டி எழுப்புவோம்’ என்ற தொனிப்பொருளிலான மாபெரும் இலவச மருத்துவ முகாம் ஹப்புகஸ்தன்னை வேவெல்கெட்டிய கிராமிய வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த மாதம் 21ஆம் திகதி, காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த இலவச மருத்துவ முகாம் நடைபெறும். விசேட வைத்திய நிபுணர்கள் கலந்துகொள்ளும் இவ் வைத்திய முகாமுக்கு அனைவரும் இதன் பயனைப் பெற்றுக்கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கிடைத்திருக்கும் இந்த அறிய சந்தர்ப்பத்தை, எமது மக்கள் பூரணமாக பயன்படுத்திக் கொள்ளும்படி, இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் சார்பில், அதன் பொருளாளர் ஆர். அஜித்குமார் கேட்டுள்ளார்.

இலவச மருத்துவ முகாமை, இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சூத்திரத்துடன் விளையாடி, மக்களை ஆத்திரமூட்டும் அரசாங்கம்

முன்னாள் அமைச்சர் மறைந்த மங்கள சமரவீர, நிதியமைச்சராக பதவி வகித்த காலத்தில், எரிபொருளுக்கான சூத்திரத்தை அறிமுகப்படுத்தினார். அன்று, சூத்திரத்தை கடுமையாகப் பலரும் விமர்சித்தனர். அதனால், மக்களுக்கு நன்மை கிடைக்காதென வாதம் செய்தனர்.

மங்களவின் மறைவுக்குப் பின்னர், சூத்திரத்தின் முக்கியத்துவத்தை பலரும் புரிந்துகொண்டனர். அந்தச் சூத்திரமே தற்போதும் நடைமுறையில் உள்ளது. எரிபொருள் நெருக்கடிக்குப் பின்னர், மாதத்தின் நடுத் திகதியான 15ஆம் திகதி, சூத்திரத்தின் பிரகாரம் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

ஜூலை 15ஆம் திகதியன்று, எரிபொருட்களின் விலைகள், ஓரளவுக்கு குறைந்தன. சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் பெரலின் விலை குறைந்துள்ளது. எனினும், உள்ளூர் சந்தையில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படவில்லை.

அறிவிப்பொன்றை விடுத்திருந்த அமைச்சு, இம்முறை (ஒகஸ்ட் 15) எரிபொருள் விலை சூத்திரத்தில் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படவில்லை. பழைய விலைகளின் பிரகாரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என குறிப்பிட்டிருந்தது.

அன்றையதினம் (ஒகஸ்ட் 15) சூத்திரத்தின் பிரகாரம் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தால், எரிபொருட்களின் விலைகள் குறைந்திருக்கும். ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டணியின் அறிவிப்பின் பிரகாரம், பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள், 70 ரூபாவால் குறைந்திருக்கும்.

விலை குறைப்பின் பயனை, மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் இதய சுத்தியுடன் இம்மாதம் நடந்துகொள்ளவில்லை என்பது புலனாகின்றது. ஆக, இந்த அரசாங்கத்திடமிருந்தும் நியாயத்தை எதிர்பார்க்க முடியாதுபோல் உள்ளது.

தேர்தல் காலங்களில் மட்டுமே, ஜனரஞ்சகமான அறிவிப்புகள் விடப்படும். அதில் பிரதானமானவையாக விலைக்குறைப்பு, நிவாரணம், சலுகைகள் ஆகியவற்றை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

எரிபொருள் விலை நிர்ணயத்தின் போது, சூத்திரத்தை கையாண்டு இருந்திருந்தால், மக்களுக்கு கொஞ்சமாவது நிவாரணம் கிடைத்திருக்கும்.

விலைகள் கூடும்போது, "புதிய கையிருப்பு" என்றும் குறையும்போது, "பழைய கையிருப்பு" என்றும் வர்த்தகர்கள், நுகர்வோரை ஏமாற்றுவதைப் போல, இந்த அரசாங்கமும் ஒகஸ்ட் மாதம் சூத்திரத்தை விளையாடி, மக்களுக்கு ஆத்திரமூட்டி உள்ளது.

தமது இருப்பையும் சிலரது ஆதரவையும் தக்கவைத்துக் கொள்வதற்காக, வரப்பிரசாதங்களை இந்த அரசாங்கம் அள்ளிவீசிக்கொண்டிருக்கின்றது. மக்களை பற்றி, எவ்விதமான கரிசனையும் இல்லையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையிலேயே, சூத்திரத்தை அரசாங்கம் விளையாடிவிட்டது.

எனினும், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்திருந்தால், சூத்திரத்தை ஓர் ஓரத்தில் வைத்துவிட்டு, மறுவிநாடியே எரிபொருட்களின் விலைகளை இவ்வரசாங்கம் அதிகரித்திருக்கும் என்பதில் ஐயமே இல்லை.

மக்கள் சுமந்திருக்கும் சுமைகளை, ஓரளவுக்கேனும் குறைப்பதற்கு கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே, நெருக்கடிகளைக் குறைப்பதற்கு முயன்றிருக்க வேண்டும். ஆனால், அரசாங்கம் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை என்பது 'ஒகஸ்ட்-15' சூத்திரத்தில் இருந்து வெளிப்படையாகிறது.

சூத்திரத்துடன் விளையாடி, மக்களுக்கு ஆத்திரமூட்டி விடக்கூடாது என்பதை நினைவூட்டுகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தனி ஒரு மனிதன் கூட, கடன்பட்டு வாழ்க்கையை ஓட்ட முடியாது. நிலைமை இப்படியெனில், ஒரு நாடு, கோடிக்கணக்கான மக்களின் பெயர்களில் கடன்களை, எப்படி சகல நாடுகளில் இருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்? தொடர்ந்து நிதிகளைத் தருமாறு எப்படிக் கேட்க முடியும்?

ஆனால், அரசாங்கம் இன்னமும் வீம்புடனேயே இருக்கின்றது. டொலர் என்ன மரத்தில் காய்க்கும் காய்களா? இங்கு நடக்கும் காரியங்களால், மக்களின் வாழ்க்கை என்னானது? முக்கியமாக, குழந்தைகளின் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியதாகி விட்டது. கையறு நிலையில் மக்கள். எவருக்குமே நிம்மதி இல்லை.

ஆனால், அரசாங்கம் சொல்லும் தகவல்கள் என்ன? அத்திவாரம் இல்லாத வீடு போன்றதாகி விட்டது, எமது நாடு.

பணம் படைத்தவர்கள், வர்த்தகர்கள் போன்றவர்களுக்குச் சாப்பாட்டுக்கு வழியில்லை என்று இல்லை. பொருட்களின் விலை உயர்வால், 'இலாபம்' என்ற மீன்களைக் கௌவுகிறார்கள்.

விலைகூடுவதற்காக ஒளித்துவைத்த பொருட்கள், விலையேற்றங்களுடன் எகிறுகின்றன. துன்பம் என்று சொல்லமுடியாது; மகா கொடுமையான வேதனை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

சர்வகட்சி அரசாங்கம் எனும்

# ரணிலின் தந்திர வலை



புருஜோத்தமன் தங்கமயில்

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதன் மூலம் எதிர்க்கட்சிகள் அற்ற ஆட்சியை, நிலைநிறுத்திவிட முடியும் என்று நம்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கனவு, எதிர்க்கட்சிகளால் கலைக்கப்பட்டு இருக்கின்றது.

நாடு எதிர்கொண்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்துச் செயற்பட வேண்டிய அவசியம் இருப்பதாக, ரணில் தொடர்ந்தும் கூறிவருகிறார்.

பிரதமர் பதவியில் மஹிந்த ராஜபக்ஷ இருந்து விலகியதும், பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட ரணில், பொதுஜன பெரமுன ஆளுமை செலுத்தாத, ஐக்கிய தேசிய கட்சியின் கொள்ளை, கோட்பாடுகள் கொண்ட அரசாங்கமொன்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று விரும்பினார். ஆனால், அதற்கு ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அணியினரும் பெருந்தடையாக இருந்தார்கள்.

அப்படியான நிலையில், 'நாட்டின் பொருளாதாரத்தை உடனடியாகச் சீர்செய்ய முடியாது; அவ்வளவுக்கு ராஜபக்ஷர்கள் சீரழித்து வைத்திருக்கிறார்கள்' என்ற தொனிப்பட ரணில், தொடர்ந்தும் உரைகளை ஆற்றிவந்தார். நெருக்கடி நிலை இன்னும் இன்னும் மோசமடையும் என்றும், அவர் எச்சரிக்கத் தொடங்கினார். அதுதான், கோட்டாவுக்கு எதிரான போராட்டம், அடுத்த கட்டத்தை அடைந்து, அவரை நாட்டைவிட்டு ஓடவும் வைத்தது.

அந்தச் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்த ரணில், சரியான விதத்தில் காய்களை நகர்த்தி, பதவியில் இருந்து விரட்டப்பட்ட ராஜபக்ஷர்களின் ஒத்துழைப்போடு, ஜனாதிபதி பதவிக்கும் வந்துவிட்டார். அன்றிலிருந்து, ஐ.தே.கவை மீளவும் நிலைநிறுத்தும் வேலைகளை, அவர் மேற்கொண்டு வருகின்றார். அதன்மூலம், கட்சியின் நேரடியாக ஜனாதிபதியாகத் தான் போட்டியிட்டு, வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிறார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில், ராஜபக்ஷர்கள் அணிக்குள் இருந்து ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஏனெனில், ராஜபக்ஷர்கள் தவிர்ந்த ஒருவரை, பொதுஜன பெரமுனவுக்குள் இருந்து ஜனாதிபதியாக முன்னிறுத்தும் எண்ணம் ஏதும், ராஜபக்ஷர்களுக்கு இல்லை.

ஏனெனில், தங்களைத் தாண்டி வேறு யாரையாவது பொதுஜன பெரமுனவுக்குள் இருந்து ஜனாதிபதி பதவியைப் பிடித்துவிட்டால், கட்சியும் எதிர்கால ஆட்சிக்கனவும், தங்களிடம் இருந்து பறிக்கப்பட்டுவிடும் என்று ராஜபக்ஷர்கள் நினைக்கிறார்கள். அதனால், தங்களது கட்சிக்குள் இருந்து, இன்னொருவரை வளர்த்துவிடும் எந்த எண்ணப்பாட்டிலும் அவர்கள் இல்லை.

இப்போது உடல் - மன ரீதியாகத் தளர்ந்து போயிருக்கிற மஹிந்த, கட்சியை முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அளவுக்கு இல்லை. ஆனாலும், எப்படியாவது கட்சியைக் காப்பாற்றி, அதன் தலைமைப்பீடத்தில் தன்னுடைய மகனான நாமல் ராஜபக்ஷவை இருந்திவிட வேண்டும் என்று நினைக்கிறார். அதன்மூலமே, நாமலை எதிர்காலத்தில் ஜனாதிபதியாக்கி, ஆட்சியை ராஜபக்ஷர்களிடம் தக்க வைத்துக் கொள்ளலாம் என்பது அவரது எண்ணம்.

அதற்கு, ரணிலை, தற்போதைக்கு ஆதரிப்பதுதான் இருப்பதில் ஒரே வழி. அதனால்தான், ரணிலை வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்காக, மஹிந்த மிகுந்த பிரயத்தனப்பட்டார். அதனால், கோட்டாவின் மிகுதி ஆட்சிக் காலத்துக்காக ரணில் வந்தார். பாராளுமன்ற வாக்கெடுப்பில் வென்றதும், மஹிந்தவின் வீட்டுக்குத் தேடிச் சென்ற ரணில், அங்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக, தனிப்பட்ட உரையாடலை நிகழ்த்தியுள்ளார்.

இதன்போது, இருவரும் பொதுஜன பெரமுனவையும் ஐ.தே.கவையும் மீளவும் உயிர்ப்போடு மீட்டெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தி உரையாடி இருக்கிறார்கள். அதன்மூலமே, ராஜபக்ஷர்களின் வாரிசு அரசியலும், ஐ.தே.கவின் வம்ச அரசியலும், நிலைத்து நிற்கும் என்று நம்புகிறார்கள். அதற்காக, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிட்டால், அதனை ஆதரிக்கும் கட்டத்தில் ராஜபக்ஷர்கள் இருக்கிறார்கள்.

இங்கு, 'ராஜபக்ஷர்கள்' என்று குறிப்பிடப்படுவது பஷில், கோட்டா தவிர்ந்த ராஜபக்ஷர்களை. ஏனெனில், பஷிலுக்கு ஜனாதிபதி கனவு உண்டு. அதற்காக அவர் இன்னமும் காய்களை நகர்த்தி, பொதுஜன பெரமுனவைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான வேலைகளில் ஈடுபடுகிறார்.

ஆனால், சகோதரர்களை குறிப்பாக, பஷிலை நம்பும் கட்டத்தில் மஹிந்த இல்லை. ஏற்கெனவே, கோட்டாவிடம் ஆட்சியைக் கொடுத்து, ராஜபக்ஷர்கள் மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாத அளவுக்கான வேலைகளை செய்துவிட்டார் என்பது, அவரது கோபம். அதுபோல, பஷிலும் ராஜபக்ஷர்கள் மீது 'ஊழல்வாதிகள்' என்ற அடையாளத்தை ஏற்படுத்திவிட்டவர் என்ற ஆத்திரம் மஹிந்தவிடம் உண்டு.

பஷில், பாரம்பரிய அரசியல்வாதிகளுக்கு உரிய குணவியல்புகள் இன்றி, 'தனியாவர்த்தனம்' செய்து பணத்தை குவிப்பதிலேயே கவனம் செலுத்துவார்.

இதனால், ஆட்சி, அரசியலில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கான வாய்ப்புகளை ராஜபக்ஷ குடும்பம் இழந்துவிடும் என்பது மஹிந்தவின் எண்ணம். இதனால்தான், பஷில் கட்சிக்குள் வகிக்கும் பதவியை, நாமலிடம் பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்று அவர் முயன்றுவருகிறார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில், ராஜபக்ஷர்கள் யார் போட்டியிட்டாலும், வெற்றிபெற முடியாது என்பது வெளிப்படையானது. அப்படியான நிலையில், அதற்கு அடுத்த ஜனாதிபதி தேர்தலை குறிவைத்து, மஹிந்த செயற்பட நினைக்கிறார். அதில், நாமலை வேட்பாளராக்கி, வெற்றிபெற வைக்க வேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பு.

இன்னொரு பக்கத்தில், ரணிலுக்கு இப்போது 74 வயது கடந்துவிட்டது. இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றால், அதில் வெற்றிபெற்று, ஜனாதிபதி பதவியை அடைந்தால், 81 வயது வரை ஆட்சியில் இருந்துவிட்டு,அரசியலில் இருந்து ஒதுங்கிவிடலாம் என்று நினைக்கிறார்.

நாட்டு மக்களால், நேரடியாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராக இருக்க வேண்டும் என்கிற அவா ரணிலுக்கு உண்டு. அதுதான், ஜே. ஆர் ஜெயவர்தனவின் அரசியல் வாரிசாக அவர் விரும்புவது. அதுவே, ஐ.தே. கவை, தன்னுடைய அரசியல் வாரிசான ருவான் விஜயவர்தனவிடம் குழப்பங்கள் இன்றி, கட்சியை கையளிக்கவைக்கும் என்பது அவருக்கு தெரியும்.

இப்படியான கட்டத்தில்தான், மஹிந்தவும் ரணிலும் தெளிவான இணக்கப்பாட்டோடு, தங்களது அரசியலை, தற்போது செய்து வருகின்றார்கள். அதன்போக்கில்தான், சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் சதித்திட்ட யோசனையோடு ரணில் முன்வந்திருக்கின்றார்.

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டால், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை மெல்ல மெல்ல நலிவடையச் செய்துவிடலாம் என்பது அவரது எதிர்பார்ப்பு. தான் பிரதமர் பதவிக்கு வந்ததுமே, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான நபர்களில் ஒருவரான ஹரீன் பெர்னான்டோவை பிரித்தெடுக்க முடிந்த அவரால், சர்வகட்சி அரசாங்கம் அமைந்து, அதில், ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்களுக்குப் பிரதான அமைச்சுகளை வழங்கி, ஆட்சியில் பங்காளிகளாக்கி விட்டால், சஜித் பிரேமதாஸவிடம் இருந்து அவர்களை இலகுவாக பிரித்தெடுத்துவிடலாம். அதன்மூலம், ஐ.தே.கவில் இருந்து விலகிச் சென்றவர்களை, மீண்டும் கட்சியில் இணைத்து, கட்சியைப் பலப்படுத்த முடியும்.

ஆனால், அந்த எண்ணத்தைப் புரிந்து கொண்ட சஜித், தன்னுடைய கட்சியை சர்வகட்சி அரசாங்கத்தில் அங்கம்பெற வைப்பதில் இருந்து விலகினார். அத்தோடு, பிரதான எதிர்க்கட்சி என்ற நிலையைப் பேணுவதுதான், அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உறுதிப்படுத்தும்.

அது இல்லாமல், ஆட்சியில் பங்காளியாகிவிட்டு, ராஜபக்ஷர்கள்- ரணில் இணக்கப்பாட்டோடு நடைபெறும் ஆட்சியை விமர்சிக்க முடியாது. அதனை, மக்கள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். ரணிலும் ராஜபக்ஷர்களும் கட்சிகள், இயக்கங்களை இலகுவாக உடைந்துவிடுவார்கள். கடந்த காலங்களில், அவ்வாறான வேலைகளை நிகழ்த்தியும் காட்டியிருக்கிறார்கள். அதனால், சஜித், ஐக்கிய மக்கள் சக்தியை கட்டிக் காப்பாற்றுவதிலேயே கவனமாக இருக்கிறார்.

அதனால், அடுத்த தேர்தல் வரையில், பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தியை பேணவே சஜித் விரும்புகிறார். இதனால்தான், ரணிலின் சர்வகட்சி அரசாங்கம் என்ற பொறியில் இருந்து சஜித் விலகியிருக்க நினைத்தார். ஐக்கிய மக்கள் சக்தியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் அங்கம் வகிக்காத அரசாங்கத்தை சர்வகட்சி அரசாங்கமாக முன்னிறுத்த முடியாது.

ஏனெனில், தற்போதைய பாராளுமன்றத்துக்குள் எதிர்வரிசையில் ஆரம்பம் முதல் இருக்கும் முதல் மூன்று கட்சிகள் இவை. இந்தக் கட்சிகளைத் தவிர்த்துவிட்டு எவ்வாறான ஆட்சிகள் அமைக்கப்பட்டாலும் அது சர்வகட்சி அரசாங்கம் என்ற பெயரைப்பெறாது. அதனை மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அதனால், அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்காக தன்னைத் தயார்படுத்தும் ரணிலின் திட்டங்களில், பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் போட்டியிட்டால், அது தனக்கு பெரும் நெருக்கடியாக இருக்கும் என்று அவருக்கு தெரியும். அதன்போக்கிலேயே, சஜித் அணியை அவர் உருக்குலைக்கும் வேலைகளுக்காக, சர்வகட்சி அரசாங்கம் என்ற பெயரோடு வந்தார். ஆனால், அது சாத்தியமில்லை என்றாகிவிட்டது.

அதனால், சஜித்தோடு இருப்பவர்களை தனித்தனியாக இழுத்து, ஆட்சியில் பங்காளிகளாக்க அவர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இவற்றைத் தவிர்த்து, சர்வகட்சி அரசாங்கம் என்பதெல்லாம், மக்களைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் என்பதெல்லாம் வெறும் 'மாயை'.

## கடிதங்கள்

### ஆபத்தான வழியில் மக்கள் பயணம் தொடர்கிறது...



மஸ்கெலியா - நல்லதண்ணி பிரதான வீதியில், மோகினி எல்ல பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக, மஸ்கெலியா - நல்லதண்ணி வீதியில் சேவையில் ஈடுபட்டு வரும் தனியார், அரச பஸ்கள், மோகினி எல்ல பகுதியில் நிறுத்தப்படுவதால், அந்த இடத்தில் இருந்து பயணிகள் இறங்கிச் செல்லும் வழி, மிகவும் ஆபத்தானதாக உள்ளது.

சறுக்கலும் சேறும் சகதியுமான வழியால், மேட்டு நிலப்பகுதிக்கு ஏற வேண்டிய நிலை காணப்படுவதால், அப்பகுதியில் உள்ள மக்கள், பயணிகள், மாணவர்கள், அலுவலக ஊழியர்கள், பாதுகாப்பு பிரிவினர் எனச் சகல தரப்பினரும், மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். இது குறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கையையும் முன்வைக்கின்றார்கள்.

மஸ்கெலியா பிரதேச சபை முன் வந்து, இதற்குத் தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என, பாதிப்புக்கு உள்ளாகி வரும் பாடசாலை மாணவர்கள், கோரிக்கை விடுக்கின்றனர்.

– செ. தி பெருமாள்

சென்னை

# தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு

அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க.,) பொதுக்குழு தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதி ஜெயச்சந்திரன், ஓபிஎஸ்க்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கியுள்ளதால் அதிர்ச்சி அடைந்த எடப்பாடி தரப்பு, தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக அறிவித்து உள்ளது.

தீர்ப்பு நகல் வந்தபின், சட்ட வல்லுநர்களோடு ஆலோசித்து அடுத்தகட்டம், மேல்முறையீடு குறித்தெல்லாம் கட்சிதான் முடிவு செய்யும் என ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.



தீர்ப்பில், அ.தி.மு.க பொதுக்குழுவை கட்சியின் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் இணைந்துதான் கூட்ட வேண்டும் என்றும், தனிக்கூட்டம் கூட்டக்கூடாது என்று கூறியதுடன், பொதுக்குழுவை கூட்ட ஆணையரை நியமிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

எடப்பாடி பழனிசாமியை அ.தி.மு.க, இடைக்கால பொதுச்செயலாளராக தேர்வு செய்தது செல்லாது என்றும், பொதுக்குழுவை கூட்ட 30 நாள்களுக்கு முன்பு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். ஆனால், அவ்வாறு அனுப்பாததால் எடப்பாடி தரப்பு பொதுக்குழு செல்லாது என்றும் கூறியுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு, எடப்பாடி தரப்புக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், “தீர்ப்பானது, ஓபிஎஸ்க்கு ஆதரவானது கிடையாது. 90 சதவீத கட்சியினர், ஒற்றைத் தலைமையை ஏற்றுள்ளனர். தீர்ப்பு நகல் வந்தபின்னர், சட்ட வல்லுநர்களோடு ஆலோசித்து அடுத்தகட்டம், மேல்முறையீடு குறித்தெல்லாம் கட்சி தான் முடிவு செய்யும். ஓபிஎஸ்க்கு கிடைத்த வெற்றி நிரந்தரமானது அல்ல என்றார்.

புதுடெல்லி

காங்கிரஸ் தலைமை பொறுப்பு;

# ராகுல் மௌனம்

காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தலை நடத்துவதற்கான காலம் நெருங்கிவரும் சூழலில், தலைவர் பதவிக்காக போட்டியிடுவது குறித்து, ராகுல் காந்தி மௌனம் காப்பது, தேர்தல் ஏற்பாட்டாளர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. காங்கிரஸ் தலைவர் தேர்தல் ஒகஸ்ட் 21இல் இருந்து செப்டெம்பர் 30க்குள் நடத்தி முடிக்கப்படுமென அக்கட்சி அறிவித்திருந்தது. ஆனால், தலைவர் பதவிக்கான போட்டி குறித்த தனது முடிவை, ராகுல் இன்னும் தெளிவுபடுத்தவில்லை.



காங்கிரஸ் கட்சியும் ராகுலை ஊக்குவித்து, தலைவர் பதவிக்கு போட்டியிட வைப்பதற்கு பல்வேறு உத்திகளையும் கையாண்டு, சோர்ந்துவிட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தலைவர் பதவி போட்டி குறித்து, ராகுல் தெளிவாக ஏதும் தெரிவிக்காததால் தேர்தல் முடிவை இறுதி செய்யும் காங்கிரஸ் காரிய குழுக் கூட்டம் நடைபெறுவதும் தள்ளிப்போகிறது.

சென்னை

# பொதுக்குழு செல்லாது

அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) பொதுக்குழு விவகாரத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஓ.பன்னீர்செல்வத்துக்கு (ஓபிஎஸ்) ஆதரவாக வெளியான நிலையில், அவரது ஆதரவாளர்கள் தீர்ப்பு வெளியானதையடுத்து இனிப்பு வழங்கியும் பட்டாசு வெடித்தும் கொண்டாடினர்.

அ.தி.மு.க பொதுக்குழுவுக்கு எதிராக ஓபிஎஸ், வைரமுத்து தொடர்ந்த வழக்கில் நேற்று (17) காலை 11.30 மணிக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.



அதில், ஜூலை 11 ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க பொதுக்குழு செல்லாது என்றும், ஜூன் 23 ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க பொதுக்குழுவின்போது இருந்த நிலையே தொடர வேண்டும் என்றும் உத்தரவிட்டு உள்ளார். இதனால், அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர், துணை ஒருங்கிணைப்பாளர் பதவி மீண்டும் உயிர்பெற்றுள்ளது. அதுபோல, எடப்பாடியின் இடைக்கால பொதுச்செயலாளர் பதவி இரத்தாகி உள்ளது.

இந்த நிலையில், தீர்ப்பு ஓபிஎஸ்க்கு சாதகமாக வந்ததால், அவரது ஆதரவாளர்கள் இனிப்பு வழங்கியும் பட்டாசு வெடித்தும் கொண்டாடி வருகின்றனர். ஓபிஎஸ் வீடு அருகே அ.தி.மு.கவினர் குவிந்து பட்டாசுகளை வெடித்து கொண்டாடி வருகின்றனர்.


புதுடெல்லி

# இராஜினாமாவை தடுக்க 10 சதவீதம் ஊதிய உயர்வு

கொரோனா பரவத் தொடங்கியதை அடுத்து பெரும்பாலான நிறுவனங்கள், தங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்து பணிபுரிய அனுமதித்தன. சென்ற ஆண்டு கொரோனா தொற்று தீவிரம் குறைந்ததை அடுத்து, பல நிறுவனங்கள் ஊழியர்களை அலுவலகத்துக்கு அழைத்தன. இதற்கு சிலர் தயக்கம் காட்டினர்.

இதனால், வீட்டிலிருந்து பணிபுரியும் வாய்ப்பைத் தரும் நிறுவனங்களை நோக்கிச் செல்லத் தொடங்கினர். இதனால் ஊழியர்கள் தாமாக முன்வந்து இராஜினாமா செய்வது அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், ஆலோசனை நிறுவனமான ‘வில்லிஸ் டவர்ஸ் வாஸ்டன்’ 168 நாடுகளில் உள்ள நிறுவனங்களில், ஊழியர்களின் ஊதியம் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில், அறிக்கை தயார் செய்துள்ளது. இந்தியாவில் 590 நிறுவனங்கள் இந்த அறிக்கைக்காக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.




அதன்படி, இந்தியாவில் உள்ள நிறுவனங்கள், 2022ஆம் ஆண்டில் ஊழியர்களுக்கு 10% அளவில் ஊதிய உயர்வு வழங்கும் என்றும் குறிப்பாக, தொழில்நுட்பம், நிதி சேவைகள், ஊடகம், கேமிங் உள்ளிட்ட துறைகளில் ஊதிய உயர்வு அதிகம் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை

# ஆழ்கடலில் மோதிரம் மாற்றி நிச்சயம் செய்த காதல் ஜோடி

நீலாங்கரை சேர்ந்த பொறியியல் பட்டதாரிகள் சுரேஷ்- கீர்த்தி. சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகின்றனர். காதலர்களான இவர்கள், விரைவில் திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டு, தங்களது நிச்சயதார்த்த நிகழ்வை வித்தியாசமான முறையில் நடத்த திட்டமிட்டனர்.

எனவே இருவரும் ஆழ்கடலில் நிச்சயதார்த்தம் நடத்த முடிவு செய்தனர். இதனடிப்படையில், ஆழ்கடல் நீச்சல் பயிற்சியாளர் அரவிந்திடம் ஆலோசனை பெற்று, அதற்கு உரிய பயிற்சியும் எடுத்துக் கொண்டனர்.



பயிற்சியைத் தொடர்ந்து, இவர்கள் நீலாங்கரை-கடற்கரை ஆழ்கடலில் 50 அடி ஆழத்தில் தங்களது நிச்சயதார்த்த நிகழ்வை நடத்தினார்கள்.

ஆழ்கடலில் 50 அடி ஆழத்தில் இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து கடல் மேல்மட்டத்திற்கு வந்தவர்களை ஆழ்கடல் நீச்சல் வீரர்கள் பூத்தூவி வாழ்த்தினார்கள். ஆழ்கடலில் நிச்சயத்தார்த்தம் நடத்துவது, இதுவே முதல்முறை என ஆழ்கடல் நீச்சல் பயிற்சியாளர் அரவிந்த் தெரிவித்துள்ளார்.





## பாதணிகள் வழங்கல்...

அம்பாறை, மத்தியமுகாம், சவளக்கடை பிரதேசத்தில் உள்ள அமீர் அலி விளையாட்டுக் கழகம் மற்றும் சவளக்கடை றூல் பிரக்கஸ் உதைபந்தாட்ட அக்கடமிகளுக்கு, திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரிஸின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், உதைபந்தாட்ட காலணிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு, நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.பி நவாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

(படங்கள்: நூருல் ஹுதா உமர், சர்ஜுன் லாபீர்)













## மதிய உணவு வழங்கல்...

இலங்கை அனைத்துலக மருத்துவநல அமைப்பால், மதிய உணவு வழங்கும் செயற்றிட்டம், நேற்று (17) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்கும் 700 மாணவர்களுக்கு குறித்த திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

(படங்கள்: சுப்பிரமணியம் பாஸ்கரன்)

## தளவாடங்கள் வழங்கல்...



இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் காணப்படும் மூன்று முதியோர் சங்கங்களுக்கு, தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான காரியாலய தளவாடங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு, இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ். எம் ரஷ்ஷான் (நளீமி) தலைமையில், பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

(படங்கள்: நூருல் ஹுதா உமர்)





## முப்பெரும் திறப்புவிழா



தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் முப்பெரும் திறப்புவிழா கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம் பாஸில் தலைமையில் நேற்று (17) நடைபெற்றது.

(படங்கள்: எம். எஸ். எம் ஹனீபா)





## திருவள்ளுவர் விழா



மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ ஸ்ரான்லி டிமெல் தலைமையில், மாவட்ட செயலகத்தில், நேற்று முன்தினம் (16) திருவள்ளுவர் விழா நடைபெற்றது. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டுதலில், மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பேரவையும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

(படங்கள்: எஸ் றொசேரியன் லெம்பேட்)



இன்று ஆரம்பிக்கிறது ODI தொடர்:

# இந்தியாவை வீழ்த்துமா சிம்பாப்வே?

சிம்பாப்வே, இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டி (ODI) தொடரானது, ஹராரேயில் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 12.45 நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

பங்களாதேஷுடனான தொடரை வென்ற உற்சாகத்துடன் இருக்கும் சிம்பாப்வே இந்தியாவை வெல்வதற்கு மிகவும் மேம்பட்ட தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிக்காட்ட வேண்டியுள்ளது.

நட்சத்திர துடுப்பாட்டவீரர் சிகண்டர் ராசா, சகலதுறைவீரர் வெஸ்லி மட்ஹெவெரே, அணித்தலைவர் றெஜிஸ் சகப்வா உள்ளிட்டோர் நீண்ட இனிங்ஸ்கள் ஆடுமிடத்தே இந்தியாவுக்கு சவாலையளிக்க முடியும்.

மறுபக்கமாக, நீண்டகால காயங்களிலிருந்து திரும்பிய லோகேஷ் ராகுல், தீபக் சஹர் ஆகியோருக்கு அணியில் தமதிடங்களை உறுதிப்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாக இத்தொடர் காணப்படுகின்றது. இதுதவிர, சஞ்சு சாம்ஸன், ஷுப்மன் கில், ராகுல் ட்ரிபாதி, ருத்துராஜ் கைகவாட், இஷன் கிஷன், ஷபாஸ் அஹ்மட் போன்றோரும் குழாம்களில் தமதிடங்களை தொடருவதற்கு தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிக்காட்ட வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர்.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# நெதர்லாந்தை வென்ற பாகிஸ்தான்



நெதர்லாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், றொட்டர்டாமில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 314/6 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: பக்கர் ஸமன் 109 (109), பாபர் அஸாம் 74 (85), ஷடாப் கான் ஆ.இ 48 (28), அக்ஹா சல்மான் ஆ.இ 27 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: பஸ் டி லீட் 2/42, விவியன் கிங்மா 1/61)

நெதர்லாந்து: 298/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஸ்கொட் எட்வேர்ட்ஸ் ஆ.இ 71 (60), டொம் கூப்பர் 65 (54), விக்ரம்ஜிட் சிங் 65 (98) ஓட்டங்கள். பந்துவீச்சு: நசீம் ஷா 3/51, ஹரிஸ் றாஃப் 3/67, மொஹமட் நவாஸ் 1/35, மொஹமட் வாஸிம் 1/55)

போட்டியின் நாயகன்: பக்கர் ஸமன்

இரண்டு அணிகளுக்குமிடையிலன இரண்டாவது போட்டியானது இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.


# ஜுவென்டஸ் செல்லும் டிபே?



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸுக்கு, ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான மெம்பிஸ் டிபே செல்லவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

கடந்தாண்டு பார்சிலோனாவில் இணைந்த 28 வயதான டிபே, 28 லீக் போட்டிகளில் 12 கோல்களைப் பெற்றிருந்தார்.

# யுனைட்டெட் செல்லும் கஸேமீரோ?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான கஸேமீரோவைக் கைச்சாத்திடுவது குறித்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

மட்ரிட்டுடன் எதிர்வரும் 2025ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 30 வயதான கஸேமீரோ அங்கேயே நீடிக்க விரும்புவதுடன், யுனைட்டெட்டுக்குச் செல்வதில் ஆர்வம் காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீனா

# 7 பேருக்குப் பொருளாதாரத் தடை

சீனாவிடம் இருந்து பிரிந்து தனிநாடாக உருவெடுத்த தாய்வானுக்கு அமெரிக்கா பல்வேறு வழிகளில் உதவி செய்து வருகிறது.

இது, தாய்வானை தங்கள் நாட்டின் ஒரு பகுதி சொந்தம் கொண்டாடி வரும் சீனாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது.“

இப்பதற்றத்துக்கு மத்தியில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 பேரைக் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்று அண்மையில் தாய்வானுக்குச் சென்று அந்நாட்டு ஜனாதிபதி சாய் இங் வென்னை சந்தித்து



பேச்சுவார்த்தை நடத்தியுள்ளமை சீனாவுக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதில் ஆத்திரமடைந்த சீனா, தாய்வானை நாலாபுறமும் சுற்றிவளைத்து கடல் மற்றும் வான்வெளியில் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் அமெரிக்க எம்.பி.க்களின் வருகைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தாய்வானின் மூத்த அதிகாரிகளான தாய்வானின் சுதந்திரத்தை தீவிரமாக ஆதரித்து வரும் அமெரிக்காவுக்கான தைவான் பிரதிநிதி ஹசியாவ் பி கிம், தைவான் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் பொதுச் செயலாளர் வெலிங்டன் கூ, தைவான் துணை சபாநாயகர் சாய் சி சாங் உட்பட 7 பேர் மீது சீனா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

முன்னதாக நான்சி பெலோசியின் வருகையை தொடர்ந்து தாய்வானின் வணிக நிறுவனங்கள் மீது சீனா பொருளாதாரத் தடைகளை விதித்திரு ந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

# எலானின் அறிவிப்பில் ரசிகர்கள் மகிழ்ச்சி

உலக பணக்காரர்களில் ஒருவரும் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும், அதன் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலோன் மஸ்க் (Elon musk) அண்மையில் பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறினார்.

இது உலக அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் எலான் மஸ்க், உலகின் தலைசிறந்த கால்பந்து கிளப் அணிகளில் ஒன்றான மான்செஸ்டர் யுனைடெட் அணியை வாங்கப்போவதாக டுவிட்டரில் பதிவிட்டுள்ளமை உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த அணியில் பிரபல நட்சத்திர காற்பந்து வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.




கொலம்பியா

# பிரம்மாண்ட மலர்த் திருவிழா

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான கொலம்பியாவின் மெடலின் நகரில் பிரசித்தி பெற்ற ‘சிலிடெரா’ என்னும் வகை மலர்கள் அலங்கார அணிவகுப்புப்பேரணி அண்மையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

மலர்ச்செய்கைக்குப் பிரசித்தி பெற்ற இந்நகரில் ஆண்டுதோறும் இத்திருவிழா பாரம்பரிய முறையில் நடைபெற்று வருகிறது. அதன்படி இவ்வாண்டு மெடலின் நகரில் நடைபெற்ற 60ஆவது மலர் அலங்கார அணிவகுப்பு திருவிழாவைக் காண ஏராளமான மக்கள் அங்கு வருகை தந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





ஈரான்


# ஈரானிலும் குரங்கம்மை

ஆபிரிக்காவில் புதிதாக உருவான குரங்கம்மை நோய், தற்போது உலகம் முழுவதும் பரவி வருகிறது.

இதன் காரணமாக பல நாடுகளில் தீவிர கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரித்தானியா ஸ்பெயின், போர்ச்சுகல், கனடா, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் குரங்கு அம்மை பாதித்துள்ளது என உலக சுகாதார அமைப்பு அறிவித்திருந்தது.

இந்நிலையில், ஈரானில் முதல் முறையாக 34 வயதான பெண் ஒருவருக்கு குரங்கு அம்மை நோய் பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவும், அவர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.




பிரித்தானியா

# கல்லறைகளைக் காதலிக்கும் நபர்

பிரித்தானியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் கல்லறைகளைக் காதலித்து வரும் சம்பவம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

பிரித்தானியாவின் வால்வர்ஹாம்ப்டன் பகுதியைச் சேர்ந்த மார்க் டப்ஸ் என்ற நபரே இவ்வாறு நாடு நாடாகச் சென்று பிரபலங்களின் கல்லறைகளை தேடிச் சென்று பார்வையிட்டு வருகின்றார்.

அந்தவகையில் இவர் இது வரை சியாட்டிலில் உள்ள புரூஸ் லீ கல்லறை, சீனாவில் உள்ள சேர்மன் Mao கல்லறை, வாஷிங்டன் டிசியில் உள்ள முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடி கல்லறை, லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் உள்ள மர்லின் மன்றோ கல்லறை உள்ளிட்ட சுமார்



25 மேற்பட்ட பிரபலங்களின் கல்லறைகளைப் பார்வையிட்டுள்ளார்.

இதற்காக, இலங்கை மதிப்பில், சுமார் 6.5 கோடி ரூபாய் வரை மார்க் செலவு செய்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாக கல்லறைக்குள் என்ன இருக்கிறது என்று பலருக்கும் வியப்பாக தோன்றலாம். ஆனால், இதற்கான காரணம் பற்றி மார்க் டப்ஸ் சொல்லும் விஷயம், பலரை இன்னும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இது போன்ற ஒரு பயணங்கள் மூலம், தான் பாடசாலையில் கற்க முடியாத வரலாற்று பாடத்தினை நேரில் பார்த்து கற்றுக் கொள்ள முடிகிறது என மார்க் கூறி உள்ளார். 49 வயதாகும் மார்க் டப்ஸ், கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, ஊர் ஊராக சென்று இப்படி கல்லறைகளை பார்வையிட்டு வரும் நிலையில், இதனை நிறுத்தும் எண்ணமே இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


பிரித்தானியா

# இப்படியும் ஒரு திருமணமா? வைரலாகும் திரைப்படம்

பிரித்தானியாவில் வசித்து வருபவர் ரிச் தாம்கின்சன் . 48 வயதான இவர் கடந்த மாதம் ஈவி என்ற 29 வயதான பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துள்ளார்.

இந்நிலையில் திருமணத்துக்குப் பின்னர் ரிச் வேறு ஊரில் வசித்த தன் மாமனார், மாமியாரை சந்தித்தபோது அவர்கள் ஏற்கனவே ரிச்சை பல வருடங்களுக்கு முன் சந்தித்தை நினைவு கூர்ந்துள்ளனர்.

அப்போதுதான் 1990-களில் அவர்களுடன் சேர்த்து குழந்தையாக இருந்த தன் மனைவி ஈவியை சந்தித்து விளையாடியதையும் உணர்ந்து ரிச் ஒரு கணம் அதிர்ச்சியடைந்தார்.



அப்போது குழந்தையாகப் பார்த்தவள் தன் மனைவியாக வந்துள்ளமையை நினைத்து ஆச்சரியமைந்துள்ளார்.

இது குறித்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள ரிச் ” என்னையும், ஈவியையும் தந்தை - மகள் எனப் பலரும் நினைத்து விடுகின்றனர். 19 வயது வித்தியாசம் தொடர்பாக நாங்கள் கவலைப்படவில்லை. அவளை மணந்ததுதான் என் வாழ்வில் சிறந்த நாள். இந்நேரத்தில் எங்களுக்கு விரைவில் குழந்தை பிறக்கபோகிறது என்ற மகிழ்ச்சியான தகவலை கூறிக் கொள்கிறேன் ” எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஈவி ”ரிச்சின் வயது காரணமாக கர்ப்பம் தரிப்பதில் சிரமம் என்று கவலைப்பட்டோம். எனினும் தற்போது என் குழந்தையை எதிர்நோக்கியுள்ளேன். ஆகவே அற்புதமான மனிதர் என் கணவராக கிடைத்துள்ளார் எனக் கூறியுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 18 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.